அத்தியாயம் 6

*யக்ஞசிஷ்டாசனம் ஹ்யேதத்ஸதாமன்னம் விதீயதே*

# இல்லறத்தாரின் நித்திய யக்ஞங்கள்

இதுவரை நாம் மன்னர்கள் மற்றும் தபஸ்விகள் மேற்கொண்ட மகாயக்ஞங்களைப் பற்றிக் கண்டோம். மன்னர்களும், தபஸ்விகளும் பாரதத்தின் இயல்பான வாழ்க்கை முறையில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றனர் என்பதில் துளியும் ஐயமில்லை. ஆனால் சமூகம் வாழ்வதற்கு முதுகெலும்பாய் விளங்குபவர் சாமானிய இல்லறத்தாரே; அவர்களே சமூகத்தில் இயல்பான நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொறுப்பைச் சுமப்பவராம். அவர்கள் தினமும் வழங்கும் அன்ன தானத்தாலேயே இவ்வுலகின் அனைத்து உயிர்களும் பேணிக் காக்கப்படுகின்றன.

பாரதத்தில், ஒவ்வொரு கிருகஸ்தனுக்கும், தினந்தோறும் தான் உண்பதற்கு முன்னர் படைப்பின் ஜீவராசிகள் அனைத்திற்கும் தேவையான உரிய பாகத்தை அளிக்க வேண்டிய மிக விரிவான கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. சுருதி, ஸ்ம்ருதிகளில் வருணிக்கப்படும் சாதாரண கிருகஸ்தர்களின் இந்த நித்திய யக்ஞங்களில் மாமன்னர்கள் நடத்திய மகாயக்ஞங்களின் வைபவத்தையோ அல்லது, தபஸ்விகளின் யக்ஞத்தில் காணப்படும் தீவிரமான தேஜஸையோ காண்பது அரிதே. எனினும் நியமத்துடன் வழங்கப்படும் அவர்களது இடையறாத அன்னதானத்தில், அதற்கே உரித்தான ஒரு தனிச் சிறப்பும், தேஜஸும் தென்படுகின்றன. பாரம்பரிய வழிவந்த பாரத சமூக வாழ்க்கையில் அன்னதானத்திற்கு இருக்கும் தனிச் சிறப்பின் அடித்தளமாய் விளங்குவது சாதாரண கிருகஸ்தர்களின் இந்த நித்திய யக்ஞங்களே. இந்த நித்திய யக்ஞங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதாலேயே, பெரும்பாலும் பாரதத்தின் கண்ணோட்டத்தில் தருமத்திலேயே

நிலைப்பெற்றுள்ள ஒரு கிருகஸ்தன் சமூகத்தின் மற்றெல்லா பிரிவினரையும் விட உயர்ந்தவனாகப் போற்றப்படுகிறான். தங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட நித்திய அன்னதானக் கோட்பாட்டை நிறைவேற்றும் சாதாரண கிருகஸ்தன், பேரரசர்களையும் கடுந்தபஸ்விகளையும் விட மிகச் சிறந்து விளங்குகிறான்.

## கிருகஸ்தாசிரமம்: உமா சங்கரர் உரையாடல்

தருமநெறியிலான மனித வாழ்க்கையின் நான்கு ஆசிரமங்களுள் கிருகஸ்தாசிரமமே மிகச் சிறந்ததெனப் போற்றப்படுகிறது. சுருதி, ஸ்ம்ருதிகளில் கிருகஸ்தாசிரமத்தின் விசேஷ மகத்துவம் பல இடங்களில் வருணிக்கப்படுகிறது. மஹாபாரதத்தின் அனுசாஸன பர்வத்தில் பீஷ்மபிதாமஹர் பகவதி உமைக்கும் பகவான் சங்கரருக்குமிடையே நடந்த தருமத்தைப் பற்றின சிறப்பான உரையாடலை யுதிஷ்டிரருக்கு நினைவுபடுத்தி, கிருகஸ்தாசிரமத்தின் இணையில்லாப் பெருமையை உபதேசிக்கிறார். பீஷ்மபிதாமஹர் வருணிக்கும் கதையின்படி சாக்ஷாத் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பன்னிரண்டு வருட காலம் கடும்தவத்தை மேற்கொண்டு இமயமலையில் வாசம் புரிகிறார். அப்போது ஒரு நாள் நாரத முனிவர், தௌம்யர், பர்வதர், தேவலர், காஷ்யபர், ஹஸ்தி காஷ்யபர், ஸ்ரீ கிருஷ்ணதுவைபாயன வியாசர் இன்னும் மற்ற அனேக மஹரிஷிகளுடன் தபஸ்வி ஸ்ரீகிருஷ்ணரைத் தரிசிக்கும் பொருட்டு அங்கு வருகிறார். ஒன்றுகூடித் தம்மை அணுகிய மஹரிஷிகளை வரவேற்று உபசரித்த பிறகு ஸ்ரீகிருஷ்ணர் அவர்களுடன் தருமத்தைப் பற்றி விவாதிக்கிறார். இந்த விவாதத்தின் நடுவே ஸ்ரீகிருஷ்ணர் அந்த மஹரிஷிகளுக்குத் தம் வைஷ்ணவ தேஜஸைச் சிறிது உணர்த்துகிறார். பிறகு ஸ்ரீகிருஷ்ணர், அவர்கள் கேள்விப்பட்ட அல்லது பார்த்த அற்புத சம்பவங்களைப் பற்றிக் கூறும்படி கேட்கிறார். அப்போது நாரத முனிவர், முன்னொரு காலத்தில் இமயமலையில் உமைக்கும் சங்கரருக்கும் இடையே நடந்த திவ்விய உரையாடலை வருணிக்கத் தொடங்குகிறார்:

வெகு காலத்திற்கு முன்பு பகவதி உமையும் பகவான் சங்கரரும் இமயமலைச் சாரலில் சுகமான கிருகஸ்த வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்கள் சன்னிதியில் அம்மலைப் பகுதி முழுதும் அழகிய புஷ்பங்

களாலும், மகிழ்ச்சியுடைய பட்சிகளாலும், திவ்வியமான மருந்துச் செடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு அற்புத சோபையுடன் விளங்கியது. அப்போது ஒரு நாள் கிரிராஜ குமாரியான பகவதி உமை தன்னிடமிருந்த பூக்களை இமயத்தில் பிறந்து சலசலத்து ஓடும் ஆறுகளின் மீது தூவியவாறு எங்கெங்கும் நறுமணம் பரப்புகிறார். அச்சமயத்தில் தம் பதியான சங்கரரின் அருகில் வந்த உமை விளையாட்டாக அவருடைய இரு கண்களையும் மூடினார். பகவான் சங்கரரின் கண்கள் மூடப்பட்ட உடனேயே, உலகம் முழுதும் ஹோமமும் யக்ஞமும் இல்லாமல் சூனியமானது; எங்கெங்கிலும் அந்தகாரம் வியாபித்தது. அத்தருணத்தில், சங்கரர் தம் மூன்றாவது கண்ணைத் திறக்க, அந்தப் பேரொளியில் உலகமனைத்தும் பிரகாசமடைந்தது.

ஆனால் அப்பெருமானின் மூன்றாவது கண்ணின் தீட்சண ஒளியை இமயமலையால் தாள முடியவில்லை. திடீரென்று அம்மலைப் பிரதேசம் முழுவதும் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. சாலம், சரளம், சந்தனம் முதலிய சிறந்த மரங்கள் அப்பெருந்தீயில் கருகி, சாம்பலாகத் தொடங்கின. பீதியடைந்த மிருகங்கள் சங்கரரிடம் ஓடி வந்து சரணடைந்தன. கொடிகளும், மருந்துச் செடிகளும் எரிந்து போயின. இரண்டாவது பிரளயம் ஏற்பட்டது போன்ற அந்த நெருப்பு ஜ்வாலையில் சகல தாதுக்களும் நிறைந்த அந்த விசாலமான மலைச் சிகரம் தீப்பிழம்பாய் ஒளிர்ந்தது.

இவ்வாறு அப்பெரும் இமயமலை துன்புறுவதைக் கண்ணுற்ற ஷைலசுதையான பகவதி உமை இரக்கம் மேலிட உடனே சங்கரரின் கண்களை விடுவித்துக் கூப்பிய கைகளுடன் தம் பதியின் முன் நின்றார். உமையின் இந்த மிருதுவான ரூபத்தைக் கண்ட சங்கரரும் மீண்டும் தம் மங்கல ரூபத்தைக் கொண்டார். குளிர்ச்சி பொருந்திய பிரசன்னமான அவருடைய திருஷ்டி இமயத்தின் மீது விழ, அம் மலைச் சிகரம் மீண்டும் தன் எழில் கொஞ்சும் இயற்கையான வடிவத்தைப் பெற்றது. உலகமனைத்தும் மங்களமயமானது.

பிறகு உமாதேவி சங்கரரின் திருவடிகளில் அமர்ந்து அவருடைய பலவித ரூபங்களைப் பற்றியும் தருமத்தின் பலதரப்பட்ட கூறுகளைப் பற்றியும் அவரிடம் கேட்கிறார். இந்த தெய்வீக தம்பதிகளின் இடையே நடந்த உரையாடலின் நடுவே பகவதி உமை ஆசிரம தருமத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் அவாவினை வெளியிடுகிறார்.

அப்போது பகவான் சங்கரர் உமைக்கு ஆசிரம தருமத்தை விவரிக்கிறார். தொடக்கத்திலேயே அவர் நான்கு ஆசிரமங்களுள் கிருகஸ்தாசிரமமே நிச்சயமாக உயர்ந்தது எனக் கூறுகிறார்[1]:

गृहस्थः प्रवरस्तेषां गार्हस्थ्यं धर्ममाश्रितः ।

இவ்வாறு கிருகஸ்தாசிரமத்தின் தலைசிறந்த தன்மையைக் கூறிய பின்னர் பகவான் சங்கரர் நான்கு ஆசிரமங்களின் தருமங்களையும் சுருக்கமாக விளக்குகிறார். ஆனால் உமைக்குக் கிருகஸ்தாசிரமத்தின் சிறப்பை எடுத்துரைப்பதிலேயே அவருடைய சித்தம் குடிகொண்டிருக்கிறது. ஆறரை சுலோகங்களில் வானப்பிரஸ்த மற்றும் சன்னியாஸ ஆசிரம தருமங்களை வருணித்துவிட்டு மீண்டும் கிருகஸ்தாசிரம தருமத்தை விளக்கமாக விவரிக்க முற்படுகிறார்.

பகவான் சங்கரர், அனைத்து உயிர்களையும் பேணிப் போற்றுவதிலும் எல்லோருடைய வாழ்க்கை நிர்வாகத்தின் பொறுப்பேற்பதிலுமே கிருகஸ்தாசிரம தருமத்தின் சாரம் அடங்கியுள்ளது என்று கூறுகிறார். கிருகஸ்தாசிரம தருமத்தைக் கடைப்பிடிப்பவர் மனிதர்கள் மற்றும் அனைத்து ஜீவராசிகளைப் பாதுகாக்கவும் மற்றும் அதிதிகளுக்குச் சேவை செய்யவும் வாய்ப்புகள் பெறுகிறார். இதுவே கிருகஸ்தாசிரம தருமத்தின் தனிச் சிறப்பாகும். படைப்பின் அனைத்து உயிர்களின் வாழ்க்கை நிர்வாகத்திற்கு மூலாதாரமாய் விளங்குவதாலேயே கிருகஸ்தாசிரமம் மற்ற ஆசிரமங்களை விட உன்னத ஸ்தானத்தைப் பெறுகின்றது. அதன் சிறப்பு எத்தகையது என்றால், வானப்பிரஸ்தாசிரமத்தை மேற்கொண்டு ஒழுகுவோர் மிகுந்த சிரத்தையுடன் புரியும் கடுந்தவங்கள் முதலியவை முறையான கிருகஸ்தாசிரம தருமத்தின் சிறப்பில் பதினாறில் ஒரு பங்குக்குக் கூட ஈடாகாது என்கிறார் சங்கரர்[2]:

सम्यक् तपश्चरन्तीह श्रद्दधाना वनाश्रमे ।
गृहाश्रमस्य ते देवि कलां नार्हन्ति षोडशीम् ॥

கிருகஸ்தாசிரமத்தை அனுசரிக்க வேண்டிய முறைகளை விளக்கும் பகவான், ஒரு கிருகஸ்தன் பின்பற்ற வேண்டிய விரத உபவாசங்கள், சீலம், ஒழுக்கம், ஆசார அனுஷ்டானங்கள் முதலியவற்றைப்

[1] மஹாபாரதம் அனுசாஸன 141, ப. 5922
[2] மஹாபாரதம் அனுசாஸன 141, ப. 5923

*பற்றியும் உபதேசிக்கிறார். ஆனால் கிருகஸ்தாசிரமத்தாலேயே படைப்பின் அனைத்து ஜீவராசிகளும் பேணிப் போற்றப்படுவதை அவர் தொடர்ந்து வலியுறுத்துகிறார். பகவான் சங்கரர் கூறுவதாவது[3]:*

यथा मातरमाश्रित्य सर्वे जीवन्ति जन्तवः ।

तथा गृहाश्रमं प्राप्य सर्वे जीवन्ति चाश्रमाः ॥

*எவ்வாறு எல்லா உயிரினங்களும் தாயை ஆதாரமாய்க் கொண்டு உயிர் வாழ்கின்றனவோ அவ்வாறே அனைத்து ஆசிரமங்களும் கிருகஸ்தாசிரமத்தையே ஆதாரமாய்க் கொண்டு தழைக்கின்றன.*

*மேலும் பகவான் கூறுகிறார் :*

राजानः सर्वपाषण्डाः सर्वे रङ्गोपजीविनः ।

व्यालग्रहाश्च डम्भाश्च चोरा राजभटास्तथा ।

सविद्याः सर्वशीलज्ञाः सर्वे वै विचिकित्सकाः ।

दूराध्वानं प्रपन्नाश्च क्षीणपथ्योदना नराः ।

एते चान्ये च बहवः तर्कयन्ति गृहाश्रमम् ॥

*மன்னர்களும், தபஸ்விகளைப் போல் வெளி வேஷம் தரித்த பாகண்டர்களும், கலைஞர்களும், கழைக்கூத்தாடிகளும், பாம் பாட்டிகளும், வஞ்சகர்களும், கள்வர்களும், ராஜ்யத்தின் பணி யாட்களும், அனைவருமே தம்முடைய வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குக் கிருகஸ்தர்களையே நம்பியுள்ளனர். இவ்வாறே பண்டிதர்கள், வல்லுநர்கள், ஒழுக்க சீலர்கள் ஆகிய அனைவரும் கிருகஸ்தர்களையே நம்பியுள்ளனர். தவிர, வெகு தொலைவிலி ருந்து வரும் ஆற்றுணா வற்றிய வழிப்போக்கர்களும் மற்றும் பல தரப்பட்ட அனேக மனிதர்களும் கிருகஸ்தாசிரமத்தையே சார்ந்திருக்கிறார்கள்.*

*மேலும் பகவான் சங்கரர் கூறுவதாவது :*

मार्जारा मूषिकाः श्वानः सूकराश्च शुकास्तथा ।

कपोतका कर्कटकाः सरीसृपनिषेवणाः ।

अरण्यवासिनश्चान्ये सङ्घा ये मृगपक्षिणाम् ।

---

[3] *மஹாபாரதம் அனுசாஸன 141, ப. 5924*

एवं बहुविधा देवि लोकेऽस्मिन् सचराचराः ।
गृहे क्षेत्रे बिले चैव शतशोऽथ सहस्रशः ।
गृहस्थेन कृतं कर्म सर्वैस्तैरिह भुज्यते ॥

*தேவியே, பூனை, எலி, நாய், பன்றி, கிளி, புறா, காகம் முதலான நாட்டு விலங்குகள், வெவ்வேறு ஊர்வன, காட்டில் வாழும் பறவை இனங்கள், விலங்கினங்கள், வீடுகளில், வயல்களில், பொந்துகளில் உறையும் நூறாயிரக்கணக்கான ஜீவன்கள் முதலிய இவ்வுலகத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளும் கிருகஸ்தர்கள் ஆற்றும் கருமத்தின் பலனையே ஆதாரமாகக் கொண்டு உயிர் வாழ்கின்றன.*

யாருடைய செய்கையின் பயனாய் இத்துணை உயிர்கள் பூமியில் தழைக்கின்றனவோ அவருடைய கருமத்தின் பலன் மிகவும் மகத்தானதே. எனவே, கிருகஸ்தன் அடையும் மகா புண்ணியத்தைப் பற்றி பகவான் சங்கரர் இவ்வாறு கூறுகிறார்:

उपयुक्तं च यत् तेषां मतिमान् नानुशोचति ।
धर्म इत्येव संकल्प्य यस्तु तस्य फलं शृणु ।
सर्वयज्ञप्रणीतस्य हयमेधेन यत् फलम् ।
वर्षे स द्वादशे देवि फलेनैतेन युज्यते ॥

*தேவி, எந்த மதிமான் மற்ற ஜீவன்களின் உபயோகத்திற்கென வழங்கப்பட்ட பொருட்களின் பொருட்டு சோகம் அடையாமல், மற்ற ஜீவன்களைப் பேணிப் போற்றுவதே தன்னுடைய தருமம் என்று உணர்ந்துள்ளானோ, அத்தகைய தர்மநிஷ்டனான கிருகஸ்தன் அடையும் பலனை அறிவாயாக. இவ்வாறு தருமத்தின் வழியில் கிருகஸ்தாசிரமத்தைப் பன்னிரண்டு ஆண்டு காலம் மேற்கொண்டொழுகிய ஒருவன், சர்வ யக்ஞங்களையும் நடத்திய பிறகு அசுவமேத யக்ஞம் செய்தவன் அடையும் மகா பலனையே அடைந்து விடுகிறான்.*

கிருகஸ்தாசிரமத்தின் மகிமை இத்தகையதாம். அனைத்து உயிர் வாழ்க்கையும் நடைபெற கிருகஸ்தர்கள் செய்யும் நித்திய யக்ஞங்கள்

இவ்வாறு மிகுந்த மகிமை பொருந்தியதாய் விளங்குகின்றன. இதுவே பகவான் சங்கரரின் உபதேசத்தின் சாரம்.

## கிருகஸ்தர்களின் பஞ்சமகாயக்ஞங்கள்

**பஞ்சைவ மஹாயஞா: - மகாயக்ஞங்கள் ஐந்தே**

தம்மைச் சுற்றிலுமுள்ள உயிர்களைப் பேணிப் போற்றும் பொறுப்பை ஏற்கும் கிருகஸ்தர்களின் நித்தியக் கோட்பாடே சுருதி, ஸ்ம்ருதிகளில் பஞ்சமகாயக்ஞமெனக் கூறப்படுகிறது. இந்த ஐந்து மகாயக்ஞங்களையும் நாள் தவறாமல் முறைப்படி செய்து வருவதே கிருகஸ்தர்களின் கடமை. உண்மையில் பஞ்சமகாயக்ஞங்களின் கர்த்தாவாக விளங்குவதாலேயே ஒரு மனிதன் கிருகஸ்தனென்று அழைக்கப்படுவதற்கான உரிமை பெறுகிறான். பஞ்சமகாயக்ஞங்களைப் பிரதி தினமும் மேற்கொள்ளாதவனைக் கிருகஸ்தன் என்று கௌரவிக்க இயலாது. பஞ்சமகாயக்ஞங்களின் வாயிலாக ஒரு கிருகஸ்தன் தான் உண்பதற்கு முன்பு படைப்பின் எல்லாப் பிரிவுகளுக்கும் உணவின் பங்குகளை வழங்குகிறான். இதன் மூலம் படைப்பின் அனைத்து உயிர்களின் மீதான தன்னுடைய பொறுப்பை உணர்ந்து தன் எல்லைக்குட்பட்ட அனைத்து உயிர்களையும் பேணிப் பாதுகாக்கும் விரதத்தை மேற்கொள்கிறான்.

பாரத சிந்தனைக் கண்ணோட்டத்தில் தருமநெறியிலான மனித வாழ்க்கையின் மிகச் சிறப்பானதொரு அங்கமாக பஞ்சமகாயக்ஞங்கள் விளங்குகின்றன. நம் பண்டைய இலக்கியங்களில் பஞ்சமகாயக்ஞத்தைப் பற்றிய வருணனை பல இடங்களில், பல வடிவங்களில் காணப்படுகிறது. வேதங்களிலும், இதிகாச புராணங்களிலும், வெவ்வேறு காலங்களில் இயற்றப்பட்ட தரும சாஸ்திரங்களிலும் மற்ற ஸ்ம்ருதி நூல்களிலும் பஞ்சமகாயக்ஞத்தின் அனுஷ்டானங்கள் வரையறுத்து, விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

வைதிக ஸம்ஹிதைகளுள், சதபத பிராமணத்தில் பஞ்சமகாயக்ஞத்தைப் பற்றிய விளக்கம் மிகத் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் காணப்படுகிறது. சதபத பிராமணம் கூறுவதாவது [4]:

[4] சதபத 11.3.8.1-3, தொகுதி 4, பாகம் 2, ப. 157-8

पञ्चैव महायज्ञाः । तान्येव महासत्राणि भूतयज्ञो मनुष्ययज्ञः पितृयज्ञो देवयज्ञो ब्रह्मयज्ञ ऽइति ॥

अहरहर्भूतेभ्यो बलिꣳ हरेत् । तथैतं भूतयज्ञꣳ समाप्नोत्यहरहर्दद्यादोद - पात्रात्तथैतं मनुष्ययज्ञꣳ समाप्नोत्यहरहः स्वधा कुर्यादोदपात्रात्तथैतं पितृयज्ञꣳ समाप्नोत्यहरहः स्वाहा कुर्यादा काष्ठात्तथैतं देवयज्ञꣳ समाप्नोति ॥

अथ ब्रह्मयज्ञः । स्वाध्यायो वै ब्रह्मयज्ञः ॥

*மகாயக்ஞங்கள் ஐந்தே. இவையே நீண்ட காலம் நடைபெறும் மகா சத்திரங்கள் ஆகும். இந்த யக்ஞங்களாவன, பூத யக்ஞம், மனுஷ்ய யக்ஞம், பித்ரு யக்ஞம், தேவ யக்ஞம் மற்றும் பிரம யக்ஞம். தினந்தினமும் பஞ்ச பூதங்களுக்கான பலியை எடுத்து வைப்பாயாக. இவ்வாறு பூத யக்ஞம் நிறைவடைகிறது. தினந் தினமும் உணவுப் பாத்திரம் வெறுமையாகும் வரை மனிதர் களுக்கு உணவை அளிப்பாயாக. இவ்வாறு மனுஷ்ய யக்ஞம் நிறைவடைகிறது. தினந்தினமும் உணவுப் பாத்திரம் வெறுமை யாகும் வரை பித்ருக்களுக்கென உணவளிப்பாயாக. இவ்வாறு பித்ரு யக்ஞம் நிறைவடைகிறது. தினந்தினமும் விறகு வெறுமை யாகும் வரை தேவர்களுக்கென ஹோமத்தைச் செய்வாயாக. இவ்வாறு தேவ யக்ஞம் நிறைவடைகிறது.*

*இனி பிரம யக்ஞத்தின் வருணனை தொடங்குகிறது. ஸ்வாத்யா யம் செய்வது, அதாவது, தனக்கென நிச்சயிக்கப்பட்ட பரம்பரை வழிவந்த ஞானத்தின் கிளைகளை முறையுடனும் சிரத்தையுட னும் அத்தியயனம் செய்வதே பிரம யக்ஞமாகும்.*

விஜயநகர காலத்தைச் சேர்ந்த மிகப் புகழ் பெற்ற வேத பாஷ்யக் காரரான ஸ்ரீ ஸாயணாசாரியர் சதபத பிராமணத்தின் இந்த வாக்கியங் களை இவ்வாறு விளக்குகிறார் : 'பூத யக்ஞம் முதலான ஐந்து யக்ஞங் களும் எல்லோராலும் எப்பொழுதும் கடைப்பிடிக்கப்பட வேண்டி யவை என்பதால் அவை மகாயக்ஞங்கள் எனப் போற்றப்படு கின்றன'[5]:

भूतयज्ञादयो वक्ष्यमाणाः 'पञ्चैव महायज्ञाः' सर्वदा सर्वैरनुष्ठेयत्वात् ।

[5] சதபத 11.3.8.2 , ஸ்ரீ ஸாயணாசாரியரின் உரை, தொகுதி 4, பாகம் 2, ப. 157

மேலும் 'இப்பஞ்சமகாயக்ஞங்களே மகா சத்திரங்களும் கூட. ஏனெனில் ஒரு கிருகஸ்தன் தன் வாழ்நாள் முழுதும் பிரதி தினமும் இந்த யக்ஞங்களைத் தானாகவே செயலாற்றி வரவேண்டும். தவிரவும் இப்பஞ்சமகாயக்ஞங்களை அனுதினமும் ஆற்ற எந்த ருத்விஜ்ஞரையும் எதிர்நோக்கத் தேவையில்லை' என்கிறார்[6]:

महांति निश्चलानि सत्राणि 'महासत्राणि' यावज्जीवमनुष्ठेयत्वात्
ऋत्विगनपेक्षत्वाच्च ।

தைத்திரீய அரண்யகத்திலும் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய பஞ்சமகாயக்ஞங்களின் மீற முடியாத கோட்பாடுகள் வலியுறுத்தப் படுகின்றன. அரண்யகம் கூறுவதாவது: 'பஞ்சமகாயக்ஞங்கள் தினமும் தொடங்கப்பட்டு தினமும் முழுமை அடைகின்றன'[7]:

सतति प्रतायन्ते सतति संतिष्ठन्ते ।

சதபத பிராமணத்தின் பஞ்சமகாயக்ஞங்களைப் பற்றிய வாக்கியங்களை விளக்கும் ஸாயணாசாரியர் மேலும் கூறுவதாவது: பூத யக்ஞத்தில், அன்னத்தின் ஒரு பகுதியை எடுத்து பூமியிலிருக்கும் அனைத்து பூதங்களும் இந்த அன்னத்தின் அம்சத்தை அடையுமாக என்ற சங்கல்பத்துடன் தனியே இடப்படுகிறது. தேவ யக்ஞத்தில், பல்வேறு தேவர்களுக்கு முறைப்படி அழைப்பு விடுத்து அவர்களுக்கென அக்னியில் அன்னம் ஹோமம் செய்யப்படுகிறது. பித்ரு யக்ஞத்தில் முறைப்படி பித்ருக்களை அழைத்து உணவுக்கலம் வெறுமையாகும் வரையில் 'இந்த அன்னதானம் பித்ருக்களை நிறைவு செய்யுமாக' என்ற சங்கல்பத்துடன் உணவு வழங்கப்படுகிறது. மனுஷ்ய யக்ஞத்தில் எந்த விதமான அழைப்புகளும், விதிமுறைகளும் தேவையில்லை. இந்த யக்ஞத்தில், கலம் வெறுமையாகும் வரையில் 'மனிதப் பிறவி அனைத்தும் நிறைவடையட்டும்' என்ற சங்கல்பத்துடன் மனிதர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

ஸாயணாசாரியர் கூறியவாறு 'பிரம யக்ஞமாவது, தன்னுடைய கிளை அல்லது பரம்பரை வழிவந்த வித்தைகளை முறையுடனும், சிரத்தையுடனும், விதிக்கப்பட்ட கோட்பாடுகளுடனும் அத்தியயனம் செய்வதில் முழுமை பெறுகிறது'[8]:

---

[6] சதபத 11.3.8.1, ஸ்ரீ ஸாயணாசாரியரின் உரை, தொகுதி 4, பாகம் 2, ப. 157

[7] தைத்திரீய அரண்யகம் 2.10, ப. 143

[8] சதபத 11.3.8.3, ஸ்ரீ ஸாயணாசாரியரின் உரை, தொகுதி 4, பாகம் 2, ப. 158.

स्वशाखाध्ययनं ब्रह्मयज्ञ इत्यर्थः ।

இவ்வாறு விதிமுறைகளின்படி அத்தியயனம் செய்வதும் யக்ஞமே யாம்; ஏனெனில் இத்தகைய அத்தியயனத்தால் தேவர்களும், பித்ருக் களும் மற்றும் ரிஷிகள் அனைவரும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடை கின்றனர்.

## ரிணம்ஹ வை ஜாயதே யோஸ்தி: பிறப்பிலேயே கடன்பட்டவனாகப் பிறக்கிறான்

படைப்பின் அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் பலவித அம்சங்களைத் தானம் பெற்றே மனிதப் பிறவி தோன்றுகிறது. இவ்வாறான இடை யறாத தானத்தாலேயே மனித வாழ்வு சாத்தியமாகிறது. இதுவே பாரதீய பரம்பரையின் அடிப்படை உணர்வு. வேதத்தில் கூறப்படும் பஞ்சமகாயக்ஞத்தின் அன்றாட அனுஷ்டானம் பற்றிய ஆணித்தரமான கட்டளை இந்த பாரதீய உணர்வுடன் பிணைக்கப்பட்டுள்ளது. நம் முடைய இந்த சனாதன கொள்கையின்படி, மனிதன் சிருஷ்டியின் எல்லாப் பிரிவுகளிலிருந்தும் ரிணியாய், கடன்பட்டவனாய்ப் பிறக் கிறான். வாழ்க்கையை நடத்திச் செல்லும் போதும் அப்பிரிவுகளுக்கு மேலும் கடன்படுகிறான். எனவே தான் பட்டுள்ள கடனை உணர்ந்து அன்றாடம் அக்கடனைத் தீர்க்க அனைத்துப் பிரிவுகளுக்கும் தன்னால் இயன்ற வரை தானங்களைத் திரும்ப அளிக்க முயல்வதே மனிதனின் இயல்பான கடமை. இந்த ரிணத்தை, கடனை, மனிதனுக்கு உணர்த்தி இதை திருப்பிச் செலுத்துவதற்கான அன்றாட நடைமுறையே பஞ்ச மகாயக்ஞமாகும். சதபத பிராமணம் மனிதனுடன் பிணைக்கப்பட்ட இந்த இயல்பான ரிணத்தை இவ்வாறு விளக்குகிறது [9]:

ऋणंऽह वै जायते योऽस्ति । स जायमान ऽएव देवेभ्य ऽऋषिभ्यः
पितृभ्यो मनुष्येभ्यः ।।
स यदेव यजेत । तेन देवेभ्य ऽऋणं जायते तद्ध्येभ्य ऽएतत्करोति
यदेनान्यजते यदेभ्यो जुहोति ।।

---

[9] சதபத 1.5. 5.1-5, தொகுதி 1, பாகம் 1, ப. 250-1

अथ यदेवानुब्रुवीत । तेनऽर्षिभ्य ऽऋणं जायते तद्धयेभ्य ऽएतत्करोत्यर्षीणां निधिगोप इति ह्यनूचानमाहु : ।।

अथ यदेव प्रजामिच्छेत । तेन पितृभ्य ऽऋणं जायते तद्धयेभ्य ऽएतत्करोति यदेषाꣳ सन्तताव्यवच्छिन्ना प्रजा भवति ।।

अथ यदेव व्वासयेत । तेन मनुष्येभ्य ऽऋणं जायते तद्धयेभ्य ऽएतत्करोति यदेनान्व्वासयते यदेभ्योऽशनं ददाति स य ऽएतानि सर्व्वाणि करोति स कृतकर्मा तस्य सर्व्वमाप्तꣳ सर्व्वं जितम् ।।

*இந்த உலகில் எந்த மனிதனும் ரிணியாகவே, கடன்பட்டவனாகவே பிறக்கிறான். அவன் பிறக்கையிலேயே, தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள் மற்றும் மனிதர்களுக்குக் கடன்பட்டுவிடுகிறான்.*

*தேவர்களுக்கு அவன் கடனாளி. எனவே அவன் யக்ஞத்தைச் செய்கிறான். தேவர்களுக்குக் கடன்படுவதால் அவன் இவ்வாறு செய்கிறான். அந்தக் கடனிலிருந்து விடுபட அவன் தேவர்களுக்காக யக்ஞமும் ஹோமமும் செய்கிறான். ரிஷிகளுக்கு அவன் கடனாளி. எனவே அவன் ரிஷி வாக்கியங்களைக் கேட்டறிந்து திரும்ப உச்சரிக்கிறான். ரிஷிகளுக்குப் பட்ட கடனிலிருந்து விடுபட அவன் இவ்வாறு செய்கிறான். ரிஷி வாக்கியங்களைக் கேட்டு மற்றும் திரும்ப உச்சரிப்பதனாலேயே அவன் ரிஷிகளின் நிதிகோபன், அதாவது, ரிஷிகளிடமிருந்து வந்த செல்வத்தின் பாதுகாப்பாளன் என்று போற்றப்படுகிறான்.*

*பித்ருக்களுக்கு அவன் கடனாளி. எனவே அவன் சந்ததி பெற விருப்பம் கொள்கிறான். பித்ருக்களுக்குக் கடன்பட்டிருப்பதால் அவன் இவ்வாறு செய்கிறான். அந்தக் கடனிலிருந்து விடுபடுவதற்காக, பித்ருக்களின் வம்ச பரம்பரையில் இடைவெளி ஏற்படாத வண்ணம் சந்ததியை உண்டாக்குகிறான்.*

*மனிதர்களுக்கு அவன் கடனாளி. எனவே அவன் அதிதிகளை ஆதரித்து உபசாரம் செய்கிறான். மனிதர்களுக்குக் கடனாளியாகையால் அவன் இவ்வாறு செய்கிறான். அந்தக் கடனிலிருந்து விடுபட அவன் அதிதிகளுக்கு உணவும் வசதியும் அளிக்கிறான்.*

*யார் ஒருவன் இவ்வனைத்தையும் செய்கிறானோ அவன் தன் கடனிலிருந்து விடுபடுகிறான். அவன் 'க்ருதகர்மா', அதாவது,*

தான் செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவன். அவன் அனைத்தையும் அடைந்தவன், அனைத்தையும் வென்றவன்.

இவ்வாறு பாரதத்தின் சனாதன கண்ணோட்டத்தில், பஞ்சமகா யக்ஞமாவது, மனிதனுக்கு, அவன் தன்னுடைய இயல்பான கடனிலிருந்து விடுபெறுவதற்கான சாதனமாய்க் கருதப்படுகிறது. ஆக, பஞ்சமகாயக்ஞத்தை மேற்கொள்வது எந்த விசேஷ புண்ணியத்தையும் பெறுவதற்கல்ல. மாறாக இவ்வுலகில் பிறப்பதால் மற்றும் வாழ்வதால் திரளும் தன் கடனை உணர்ந்து அதனைத் தீர்க்க முயற்சிப்பதற்கே. இந்த அனுஷ்டானம் ஒரு மனிதன் சிருஷ்டியிடம் தனக்குள்ள பொறுப்பை உணர்ந்து, நிறைவேற்றும் பாரதத்தின் இயல்பான நெறிமுறை ஆகும்.

## மனு விளக்கும் பஞ்சமகாயக்ஞக் கோட்பாடு

பாரதீய பரம்பரையில் மகத்தான மனித தருமத்தை நிறைவேற்றும் எந்தப் பொறுப்பும், ஒருபோதும் தனிப்பட்டவரின் விவேகத்தின் மீது மட்டுமே விட்டு வைக்கப்படவில்லை. வைதிக ஸம்ஹிதைகள், பிராமணங்கள், அரண்யகங்கள் மற்றும் உபநிஷத்துகளில் தொகுக்கப்பட்டுள்ள சுருதி வாக்கியங்களை வெவ்வேறு ஜாதிகள், சம்பிரதாயங்களுக்கு உரித்தான ஸ்ம்ருதி கிரந்தங்களும் தரும சாஸ்திரங்களும் அந்தந்த ஜாதி, சம்பிரதாயங்கள் அனுசரிக்க வேண்டிய நியமங்களாக உருவாக்கி வழங்குகின்றன. இந்த நியமங்கள் எல்லோருக்கும் ஒரே விதமாயிருப்பது சாத்தியமல்ல. சுருதி வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள சனாதன தருமத்தை அனைத்து ஜாதிகள், சம்பிரதாயங்கள் மற்றும் சமுதாயத்தினர் தத்தம் ரீதியில் தம் நித்திய வாழ்க்கை நெறிகளுக்குள் அமைத்து முறைப்படுத்துகின்றனர். ஜாதி, சம்பிரதாயம் மற்றும் சமுதாய தருமங்கள் தனிப்பட்டதாகவும், காலத்திற்கேற்றவாறு மாற்றவும், திருத்தவும் கூடியதாகவும் விளங்குகின்றன. ஆயினும், பாரதத்தில் எந்தக் காலத்திலும், எந்த ஒரு ஜாதி, சம்பிரதாயம் அல்லது சமுதாயத்தைச் சேர்ந்தவருக்கும் மனித வாழ்க்கை பற்றிய மகத்தான விஷயங்களில் எப்போதும் பின்பற்றுவதற்கு ஏற்ற வழிமுறைகள் மற்றும் தருமநெறிகள் திட்டவட்டமாக வரையறுத்து வழங்கப்பட்டுள்ளன. மனித வாழ்க்கையின் அனைத்து

முக்கியமான விஷயங்களிலும் முறையான நியமங்களைப் பின்பற்ற ஒவ்வொரு ஜாதி, சம்பிரதாயம் மற்றும் சமுதாயத்திற்கு உரிய ஸ்ம்ருதி கிரந்தங்கள் சிறப்பான பாதைகளை வகுத்தளிக்கின்றன.

இனி நாம் பஞ்சமகாயக்ஞத்தைப் பற்றி மனுஸ்ம்ருதியில் உபதேசிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை விரிவாகக் காண்போம். மனு ஸ்ம்ருதி, பாரம்பரிய பாரத சம்பிரதாய வாழ்க்கை நெறியினைப் படம் பிடித்துக் காட்டும் அதிகாரபூர்வமான தரும சாஸ்திரமாக கருதப்படு கிறது. உண்மையில் மனுஸ்ம்ருதியானது பிராமண வருணத்தாரின் அதிகாரபூர்வமான ஸ்ம்ருதியாகும். இதில் உபதேசிக்கப்பட்டுள்ள நியமங்கள் முக்கியமாக பிராமணர்கள், அதுவும் குறிப்பாக மனுஸ்ம் ருதியின் பரம்பரையில் ஒழுகும் பிராமணர்கள் பின்பற்ற வேண்டியன வாகும்.

பொதுவாக, மற்ற வருணத்தாரை விட பிராமணர்களுக்கு இந்த பௌதிக உலகைப் பாதுகாத்து நடத்திச் செல்லும் பொறுப்பு குறை வானதே என்பது அனைவரும் அறிந்ததே. மேலும் பிராமணர்க ளுக்குப் பிரதிக்கிரகம் செய்யும் உரிமை உண்டு. அதாவது, அவர்கள் மற்ற வருணத்தாரிடமிருந்து தம் வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான அன்னம் மற்றும் அனைத்துப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளும் உரிமை உடையவராம். பிரமவித்தையைப் பாது காத்து அதனைப் பின் வரும் தலைமுறையினருக்கு வழங்குவது பிராமணர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள விசேஷ பொறுப்பாகும். பாரதத்தின் நோக்கில் பிரமவித்தையின் இந்த ஞானம் தருமத்தைப் பாதுகாக்க, அதாவது, படைப்பு முழுவதின் இயல்பான இயக்கத்தை யும் ஒத்திசைவையும் பாதுகாப்பதற்கு இன்றியமையாதது. இந்த அத்தியாவசியமான ஞானத்தைப் பேணுபவர்களாகவும் அதன் உறை விடமாகவும் விளங்குவதாலேயே பிராமணர்கள் மற்ற வருணத்தா ரிடமிருந்து தம் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பொருள் களையும் பெற்றுக் கொள்ளும் உரிமையைப் பெறுகின்றனர். இந்த உரிமை கொண்ட பிராமண கிருகஸ்தர்கள் மீதும் கூட விரிவான பஞ்ச மகாயக்ஞக் கோட்பாடுகள் மனுஸ்ம்ருதியில் எவ்வாறு விதிக்கப்பட் டுள்ளன என்பதை நாம் பின்பு காண்போம். இவ்வாறு பிராமணர்கள் பின்பற்ற வேண்டிய பஞ்சமகாயக்ஞக் கோட்பாடுகள் இத்துணை கடுமையானதாய் இருப்பின் மற்ற வருணத்தவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் மேலும் கடினமானதாகவும் மீறத்தகாதன வாகவும் இருக்கும் என்பது உறுதி.

*நமது பண்டைய இலக்கியங்களில் பஞ்சமகாயக்ஞத்தை அனைத்து வருணத்தவர்களும் தினமும் மேற்கொள்ள வேண்டும் என்ற கோட்பாடு மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. யாக்ஞ வல்கிய ஸ்ம்ருதியில் சூத்திர கிருகஸ்தர்கள் பஞ்சமகாயக்ஞத்தை ஒருகாலும் தவறவிடக்கூடாதென்று மிகத் தெளிவாகவும் ஆணித்தர மாகவும் கூறப்பட்டுள்ளது. சூத்திர கிருகஸ்தர்கள் பஞ்சமகாயக்ஞம் தொடர்பான மற்றெல்லாச் சடங்குகளையும் குறைத்துக் கொண்டு, நமஸ்கார மந்திரத்தின் ஜபத்துடன் மட்டுமே யக்ஞத்தை நிறைவேற்று வதற்கான விதிமுறை அளிக்கப்பட்டுள்ளது [10]:*

नमस्कारेण मन्त्रेण पञ्चयज्ञान्न हापयेत् ।

*மஹாபாரதத்திலும் பகவான் சங்கரர் உமை தேவியாருக்குப் பஞ்ச மகாயக்ஞத்தின் மகத்துவத்தை விவரிக்கையில் சூத்திர கிருகஸ்தர்கள் மற்ற மூன்று வருணத்தாருக்கும் விசேஷமாக ஆதித்யம் அளிக்க வேண்டிய கடமையை எடுத்துக் கூறுகிறார் [11]:*

सर्वातिथ्यं त्रिवर्गस्य यथाशक्ति यथार्हतः ।

*மஹாபாரதத்தில், காயவ்யனின் கதையும் கூறப்படுகிறது. காயவ் யனோ நிஷாதனாய் நான்கு வருணங்களையும் சாராதவன் ஆவான். தவிரவும், அவன் 'தஸ்யு' என்கிறபடியால் சமூகத்தைச் சார்ந்தவனும் அல்லன். ஆயினும் கதையின்படி, அந்த நிஷாத தஸ்யுவின் கைகளால் சுற்றுப்புறக் குடும்பங்கள் அனைத்தும் அன்னமும் போஷணையும் பெற்றன. தன்னை அண்டியோர்க்கெல்லாம் எப்பொழுதும் ஆதரவ ளித்து, மற்றும், தன் பெற்றோருக்கு சிரத்தையுடன் சேவையும் சிசுரு ஷையும் செய்ததால், நான்கு வருணங்களுக்கும் சமூகத்திற்கும் புறம் பானவனாக இருந்தும் காயவ்யன் மகாபுண்ணியத்தைப் பெற்றுப் பெருஞ்சிறப்பை அடைந்தான் [12].*

*தவிரவும், பஞ்சமகாயக்ஞத்தை ஆற்றும் கிருகஸ்தனின் இல்லத் தில் அனைத்து வருணத்து அதிதிகளுக்குமே முறையாக அன்னமும் விருந்தோம்பலும் பெற்றுக் கொள்ளும் உரிமை உள்ளது என்று ஸ்ம்ருதி நூல்கள் கூறுகின்றன. ஒரு பிராமண கிருகஸ்தனின் கிருகத் திற்கு வருகை தரும் சூத்திர அதிதியும் மரியாதைக்கும் விருந்தோம் பலுக்கும் பாத்திரமானவராம். நாம் பின்னர் காணப் போகின்றவாறு,*

[10] *யாக்ஞவல்கிய 1.121, ப. 54*

[11] *மஹாபாரதம் அனுசாஸன 141.57, ப. 5921*

[12] *மஹாபாரதம் சாந்தி 135, ப. 4762-4*

பஞ்சமகாயக்ஞத்தைக் கடைப்பிடிக்கும் கிருகஸ்தன் ஒரு சண்டாள னையும் கூட ஆதரத்துடன் வரவேற்று உபசரிப்பது இன்றியமை யாதது. இவ்வாறாக, ஆதரவுடன் உணவும் உறைவிடமும் பெறும் அதிகாரம் மற்றும் அவற்றை அளிக்க வேண்டிய கடமை இவை அனைத்து வருணத்தாருக்கும் பொதுவானதே. மனுவால் விதிக்கப் பட்டுள்ள பஞ்சமகாயக்ஞ நியமனத்தை விளக்குகையில் மற்றவர்க்கு அளிக்க வேண்டிய கடமையும், பெறுவதற்கான உரிமையும் அனை வருக்கும் பொதுவானது என்பதைப் பற்றி மேலும் சிறிது காண்போம். தற்போது, மனு விதிக்கும் நியமனத்தை முறைப்படி நோக்குவோம்.

## விவாகத்திலேயே தொடங்கும் பஞ்சமகாயக்ஞும்

கிருகஸ்தாசிரம தருமத்தின் உபதேசத் தொடக்கத்தில் மனு இவ்வாறு கூறுகிறார்: விவாகம் ஆன உடனே, விவாகச் சடங்குகளுக்காக வளர்க் கப்பட்ட ஹோம அக்னியைக் கொண்டே கிருகஸ்தன் தன் கிருஹ் யாக்னியை, தன் இல்லத்தில் விளங்கும் அக்னியை, ஸ்தாபித்து பஞ்சமகாயக்ஞத்தைப் பிரதி தினமும் கடைப்பிடிக்கத் தொடங்க வேண்டும்[13]:

वैवाहिकाऽग्नौ कुर्वीत गृह्यं कर्म यथाविधि ।
पञ्चयज्ञविधानं च पक्तिं चान्वाहिकीं गृही ॥

கிருகஸ்தனானவன், தன்னுடைய விவாக சமயத்தில் எந்த அக் னியில் லாஜ ஹோமம் முதலானவை அர்ப்பணிக்கப்பட்ட னவோ, அதே அக்னியை ஸ்தாபித்து, அந்த கிருஹ்யாக்னியில் முறைப்படி தன் எல்லா நித்திய நைம்மித்திக கருமங்களைச் செய்ய வேண்டும். தினமும் உணவு சமைப்பதையும், பஞ்சமகா யக்ஞங்களையும் அதே அக்னியில் நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு கட்டளையிட்ட பிறகு, மனு, பஞ்சமகாயக்ஞங்களை வரையறுக்கிறார்[14]:

पञ्च क्लृप्ता महायज्ञाः प्रत्यहं गृहमेधिनाम् ।
अध्यापनं ब्रह्मयज्ञः पितृयज्ञस्तु तर्पणम् ।

[13] மனுஸ்ம்ருதி 3.67, ப. 81
[14] மனுஸ்ம்ருதி 3.69-70, ப. 84-5

होमो दैवो बलिर्भौतो नृयज्ञोऽतिथिपूजनम् ॥

கிருகஸ்தனானவன் ஐந்து மகாயக்ஞங்களைப் பிரதி தினமும் கடைப்பிடிப்பது அவசியமாகும். இந்த மகாயக்ஞங்களில், அத்தியாபனம் பிரம யக்ஞம், தர்ப்பணம் பித்ரு யக்ஞம், ஹோமம் தேவ யக்ஞம், பலி இடுவது பூத யக்ஞம், மற்றும் அதிதி பூஜை மனுஷ்ய யக்ஞம்.

பஞ்சமகாயக்ஞங்களை வரையறுக்கும் மனு பெரும்பாலும் சதபத பிராமணத்தின் வரிகளையே எதிரொலிக்கிறார். எனினும், பிரம யக்ஞத்தைப் பற்றின நியமனத்தில், சதபத பிராமணம் அத்தியயனம் செய்ய, தனக்கு உரித்தான வித்தைகளைக் கற்று உச்சரிக்க, கட்டளை யிடுகிறது. ஆனால் மனுஸ்ம்ருதியானது அத்தியாபனம் செய்ய, அதாவது, மற்றவர்க்கு இவ்வித்தைகளை உபதேசிக்கக் கட்டளை யிடுகிறது. மனுஸ்ம்ருதி அத்தியயனம், அத்தியாபனம் இரண்டையும் கடமையாகக் கொண்ட பிராமண கிருகஸ்தர்க்கென பஞ்சமகாயக்ஞ நியமனத்தை உபதேசிப்பதால் மேற்கூறிய இந்த வேறுபாடு தோன்று கிறது போலும். எப்படியாயினும், மனு கூறும் பஞ்சமகாயக்ஞத்தின் கோட்பாடுகளும், வேத இதிகாசங்கள் விளக்கும் கோட்பாடுகளும் அடிப்படையில் ஒன்றாகவே உள்ளன. இவையாவும் கிருகஸ்தனே படைப்பின் அனைத்து உயிர்களின் பராமரிப்பிற்கும் ஆதாரமாய் விளங்குபவன் என்றும் பஞ்சமகாயக்ஞமே கிருகஸ்தனுக்கு இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கான மார்க்கமாகும் என்றும் கூறுகின் றன. எனவே, பஞ்சமகாயக்ஞக் கோட்பாட்டை வரையறுத்த உட னேயே மனு இவ்வாறு கூறுகிறார்[15]:

यथा वायुं समाश्रित्य सर्वे जीवन्ति जन्तवः ।
तथा गृहस्थमाश्रित्य वर्तन्ते इतराश्रमाः ।
यस्मात्त्रयोऽप्याश्रमिणो ज्ञानेनान्नेन चान्वहम् ।
गृहस्थेनैव धार्यन्ते तस्माज्ज्येष्ठाश्रमो गृहम् ।
स संधार्यः प्रयत्नेन स्वर्गमक्षयमिच्छता ।
सुखं चेहेच्छताऽत्यन्तं योऽधार्यो दुर्बलेन्द्रियैः ॥

[15] மனுஸ்ம்ருதி 3.77-79, ப. 92-4

எவ்வாறு அனைத்து உயிர்களும் வாயுவாலேயே உயிர் வாழ்கின்றனவோ, அவ்வாறே அனைத்து ஆசிரமங்களும் கிருகஸ்தாசிரமத்தையே ஆதாரமாகக் கொண்டு விளங்குகின்றன. மற்ற மூன்று ஆசிரமங்களும் கிருகஸ்தனிடமிருந்தே, அன்னத்தையும் ஞானத்தையும் பெறுவதால், கிருகஸ்தாசிரமமே மற்ற ஆசிரமங்களை விட உயர்ந்ததாகும். எனவே, இகலோகத்தில் அளவிலா சுகத்தையும், பரலோகத்தில் அழிவில்லா சுவர்க்கத்தையும் விரும்புவோர், முயற்சியுடன் கிருகஸ்தாசிரமத்தின் பொறுப்புகளை நிர்வகிப்பது அவசியம். கிருகஸ்தனின் இந்தக் கடினமான பொறுப்பை நிறைவேற்றுவது இந்திரிய பலம் இல்லாதவர்க்கு அசாத்தியமானதே.

மேலும் மனு கூறுவதாவது: ரிஷிகளும், தேவர்களும், பூதங்களும் மற்றும் அதிதிகளும் தம் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குக் கிருகஸ்தனையே எதிர்பார்ப்புடன் நோக்குகின்றனர். எனவே, ஒரு கிருகஸ்தன் இவர்களின் எதிர்பார்ப்புகளை எப்பொழுதும் மனதில் இருத்திக் கொண்டு பஞ்சமகாயக்ஞத்தை அன்றாடம் கடைப் பிடிப்பதன் மூலம் அவர்களது விருப்பங்களைப் பூர்த்தி செய்து அவர்களைத் திருப்தி செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

## பித்ரு யக்ஞம்

இவ்வாறு ஒரு கிருகஸ்தன் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் தவறாது பஞ்சமகாயக்ஞத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பிறகு, மனு இதன் ஐந்து கூறுகளையும் தனித் தனியே வரையறுத்து விளக்குகிறார். முதலில் பித்ரு யக்ஞத்தை விவரிக்கையில், கிருகஸ்தனானவன் பிரதி தினமும் அன்னமும் நீரும் அல்லது பால், பழம், கிழங்கு ஆகியவற்றை பணிவுடன் பித்ருக்களுக்கு அளித்து ஸ்ரார்த்த கருமம் செய்ய வேண்டும் என்று கூறுகிறார். இந்த அன்றாட ஸ்ரார்த்தமே பித்ரு யக்ஞமாகும்.

மேலும் மனு கூறுவதாவது: 'இந்த நித்திய ஸ்ரார்த்த கருமம் ஒரே ஒரு விப்ரருக்கு போஜனம் அளிப்பதன் மூலம் நிறைவடைகிறது. ஒரு ஆண்டில் குறிக்கப்பட்ட திதி முகூர்த்தங்களில் செய்யப்படும் மற்ற

நைம்மித்திக ஸ்ரார்த்த கருமங்களில் பித்ருக்களுக்கு பிரதிநிதியாக ஒரு விப்ரரையும், விச்வே தேவர்களின் சார்பாக மற்றொரு விப்ரரையும் போஜனத்தால் திருப்தி செய்வது அவசியமாகும். தினமும் நிறைவேற்றப்படும் பித்ரு யக்ஞத்தில் விச்வே தேவர்களின் பிரதிநிதியாக மற்றொரு விப்ரரை எதிர்பார்க்கத் தேவையில்லை'. மனுவின் வாக்கியங்களில்[16]:

एकमप्याशयेद्विप्रं पित्रर्थे पाञ्चयज्ञिके ।
न चैवात्राशयेत्कंचिद्वैश्वदेवं प्रति द्विजम् ।।

## தேவ யக்ஞம்

பித்ரு யக்ஞத்தின் விதிமுறைகளை வகுத்த பிறகு பஞ்சமகாயக்ஞத்தின் இரண்டாவது அங்கமான தேவ யக்ஞத்தின் விதிமுறைகளை மனு வழங்குகிறார்[17]:

वैश्वदेवस्य सिद्धस्य गृह्येऽग्नौ विधिपूर्वकम् ।
आभ्यः कुर्याद्देवताभ्यो ब्राह्मणो होममन्वहम् ।
अग्नेः सोमस्य चैवादौ तयोश्चैव समस्तयोः ।
विश्वेभ्यश्चैव देवेभ्यो धन्वन्तरय एव च ।
कुह्वै चैवानुमत्यै च प्रजापतय एव च ।
सह द्यावापृथिव्योश्च तथा स्विष्टकृतेऽन्ततः ।।

விச்வே தேவர்களுக்குப் போஜனம் ஆயத்தமான பிறகு பிராமண கிருகஸ்தன் கிருஹ்யாக்னியில் தேவர்களுக்கென முறைப்படி ஹோமம் செய்யவேண்டும். அக்னி, சோமன், அக்னி சோமர்கள், விச்வே தேவர்கள், தன்வந்தரி, குஹூ, அனுமதி, பிரஜாபதி, த்யாவா, பிருதிவி மற்றும் இறுதியில் ஸ்விஷ்டக்ருத் இவர்களுக்கென முறையுடன் ஆஹூதி வழங்க வேண்டும்.

மனுஸ்ம்ருதியின் உரைகளுள், மேதாதிதி எழுதியுள்ள மனுபாஷ்யம் மிகவும் போற்றப்படுகிறது. மனுபாஷ்யத்தில் மேதாதிதி,

[16] மனுஸ்ம்ருதி 3.83, ப. 97
[17] மனுஸ்ம்ருதி 3.84-86, ப. 98-100

## தேவ யக்ஞம்

वैश्वदेवस्य सिद्धस्य

'விச்வே தேவர்களுக்கென ஆயத்தமான' அன்னம் என்பதன் நேர்ப் பொருள் உலகின் அனைத்து தேவர்களுக்காகவும் ஆயத்தமான அன்னம் என்பதே என்று தெளிவுபடுத்துகிறார். ஆனால் உண்மையில் இது இல்லத்தில் சமைக்கப்பட்ட அன்னம் முழுவதையும் பற்றிய கூற்றாகும். இவ்வன்னத்திலிருந்து தேவர்களுக்கென ஹோமம் செய் யப்படுகிறது. பிறகு, அதே அன்னத்திலிருந்து பூதங்களுக்கென பலி எடுத்து வைக்கப்படுகிறது. தவிரவும், அதிதி முதலானோருக்கு போஜனம் அளிக்கப்படுகிறது. தேவர்களுக்கான ஹோமத்திற்கெனத் தனியாக அன்னம் ஆக்க வேண்டும் என்ற விதிமுறை இங்கு கூறப்பட வில்லை.

மனு தம் உபதேசங்களில், நுணுக்கமாகவும், ஆதாரபூர்வமாகவும் நியமங்களை வரையறுப்பவர் என்று புகழ் பெற்றவர். தேவ யக்ஞத் திற்கென வளர்க்கப்படும் ஹோமத்தைக் கிருஹ்யாக்னியில் செய்ய வேண்டும் என்பதே மனுஸ்ம்ருதியின் கட்டளை. கிருஹ்யாக்னி யாவது, கிருகஸ்தன் தன் விவாகத்தின் போது ஹோமத்தை வளர்த்து, தான் கிருகஸ்தாசிரமத்தைத் தொடங்கியதிலிருந்து காப்பாற்றி வரும் அக்னியாகும். வேறு சில தரும சாஸ்திரங்கள் மனுவின் இந்த நியம னத்தைச் சிறிது தளர்த்தி கிருஹ்யாக்னி இல்லையெனினும் கிருகஸ்தன் சாதாரணமாய் கிருகத்தில் அன்னமாக்கப்படும் அக்னி யிலேயே தேவ யக்ஞத்தை பூர்த்தி செய்யலாம் என்று கூறுகின்றன. இதைத் தவிர தேவ யக்ஞத்தின் கோட்பாடுகள் அனைத்தும் எல்லா தரும சாஸ்திரங்களிலும் மனுவின் கோட்பாடுகளையே ஒத்திருக் கின்றன. ஆனால், ஆஹுதி அளிக்கப்படும் தேவர்கள், ஆஹுதிகளின் வரிசைக் கிரமம் ஆகியவற்றில் மட்டும் சில மாறுதல்கள் தென் படலாம்.

## பூத யக்ஞம்

பஞ்சமகாயக்ஞ அனுஷ்டானத்தின் அடுத்த அங்கம் பூத யக்ஞமாகும். படைப்பின் அனைத்து அம்சங்களும், அசையும் பொருட்கள், அசையாதன, உயிருள்ளவை, உயிரற்றவை ஆகிய அனைத்துமே பூதங்கள் எனப்படுகின்றன. பூதங்கள் என்ற சொல் படைப்பின் மூல

தத்துவங்களையும் குறிக்கிறது. அதாவது, இச்சந்தர்ப்பத்தில் பூதங்கள் என்ற சொல்லால் அண்ட சராசரங்கள் அனைத்தும் எவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளனவோ, அத்தத்துவங்கள் என்றும் கொள்ளலாம். பூத யக்ஞத்தில் அனைத்து பூதங்களுக்கென்று அன்னத்தின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டு பூதங்களின் வெவ்வேறு பிரதிநிதிகளுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. பூதங்களுக்கென்று பிரிக்கப்படும் அன்னத்தின் அம்சம் பலியென்றும், 'பலியைத் தனியே எடுத்து வைத்தல்' பலிஹரணம் என்றும் கூறப்படுகிறது. பலிஹரணமே பூத யக்ஞமாகும். பலிஹரணத்தின் முறைகளை விளக்கும் மனு இவ்வாறு கூறுகிறார்[18]:

एवं सम्यग्घविर्हुत्वा सर्वदिक्षु प्रदक्षिणम् ।
इन्द्रान्तकाप्पतीन्दुभ्यः सानुगेभ्यो बलिं हरेत् ।
मरुद्भ्य इति तु द्वारि क्षिपेदप्स्वद्भ्य इत्यपि ।
वनस्पतिभ्य इत्येवं मुसलोलूखले हरेत् ।
उच्छीर्षके श्रियै कुर्याद्भद्रकाल्यै च पादतः ।
ब्रह्मवास्तोष्पतिभ्यां तु वास्तुमध्ये बलिं हरेत् ।
विश्वेभ्यश्चैव देवेभ्यो बलिमाकाश उत्क्षिपेत् ।
दिवाचरेभ्यो भूतेभ्यो नक्तञ्चारिभ्य एव च ।
पृष्ठवास्तुनि कुर्वीत बलिं सर्वान्नभूतये ।
पितृभ्यो बलिशेषं तु सर्वं दक्षिणतो हरेत् ।
शुनां च पतितानां च श्वपचां पापरोगिणाम् ।
वयसाञ्च कृमीणां च शनकैर्निर्वपेद्भुवि ।
एवं यः सर्वभूतानि ब्राह्मणो नित्यमर्चति ।
स गच्छति परं स्थानं तेजोमूर्तिः पथर्जुना ।।

தேவர்களுக்கென்று அக்னியில் முறையான ஆஹுதியை அர்ப்பணம் செய்த பிறகு, நான்கு திசைகளிலும் பிரதட்சிணமாக அனைத்து பூதங்களுக்கும் பலியர்ப்பணம் செய்ய வேண்டும். இந்திரன் மற்றும் அவனைப் பின்பற்றும் பரிஜனத்திற்கு

[18] மனுஸ்ம்ருதி 3.87-93, ப. 101-6

அழைப்பு விடுத்து கிழக்கு திசையிலும், யமன் மற்றும் அவன் பரிஜனத்திற்கு அழைப்பு விடுத்து தென்திசையிலும், வருணன் மற்றும் அவனுடைய பரிஜனத்திற்கு அழைப்பு விடுத்து மேற் கிலும், சோமன் மற்றும் அவனுடைய பரிஜனத்திற்கு அழைப்பு விடுத்து வடக்கிலும் பலியர்ப்பணம் செய்ய வேண்டும். வாயு தேவதைகளுக்கு வீட்டின் வாயிலிலும், ஜல தேவதைகளுக்கு நீருள்ள இடத்திலும், வனஸ்பதிகளுக்கு உலக்கை, அம்மியின் அருகிலும் பலியிட வேண்டும். ஸ்ரீக்கு அழைப்பு விடுத்து வாஸ்துபுருஷரின் தலைப்பகுதியிலும், பத்ரகாளிக்கு அழைப்பு விடுத்து வாஸ்துபுருஷரின் காலடியிலும் பலியிட வேண்டும். பிரமா மற்றும் வாஸ்தோஷ்பதிக்கு அழைப்பு விடுத்து வாஸ்து புருஷரின் மையத்தில் பலியர்ப்பித்தல் வேண்டும். பின்னர் விச்வே தேவர்களுக்கு அழைப்பு விடுத்து பகலில் நடமாடுபவை, இரவில் நடமாடுபவை ஆகிய அனைத்து உயிர்களுக்கென்று ஆகாயத்தில் அன்னத்தை பலியாக எறிதல் வேண்டும். பின்னர் அனைத்து உயிர்களும் பெருமளவில் அன்னப்பெருக்கத்தை அடையும் பொருட்டு வாஸ்துவின் பின் பகுதியில் அல்லது மனையின் மேல் பகுதியில் பலி அர்ப்பணிக்க வேண்டும். இறுதி யில், பித்ருக்களுக்காக பலியிட்ட பிறகு எஞ்சிய அன்னத்தை தென்திசையில் அர்ப்பணித்தல் வேண்டும். இதன் பிறகு நாய் களுக்கும், பறவைகளுக்கும், கிருமிகளுக்கும், சண்டாளர்களுக் கும், பாவப்பிணியால் சமூகத்திற்கு வெளிப்பட்டவர்களுக்கும், மற்ற அனைத்து விதமான தாழ்ச்சி அடைந்தவர்களுக்கும், மிகுந்த கவனத்துடன் தூசி தும்பு இல்லாத இடத்தில் பூமியின் மேல் உணவு இட வேண்டும்.

எந்தப் பிராமண கிருகஸ்தன் சிரத்தையுடன் ஒவ்வொரு நாளும் அனைத்துப் பூதங்களுக்கும் இவ்வகையில் பலியர்ப்பணம் செய்கிறானோ அவன் ஒளிவீசும் பொன் மயமான தேகத்தைப் பெற்று நேரான வழியில் பிரமலோகத்தை அடைகிறான்.

இவ்வாறு நான்கு திசைகளைப் பாதுகாக்கும் தேவதைகளையும், வாயு, ஜலம் மற்றும் வனஸ்பதியின் அபிமானி தேவர்களையும், மனையைக் காக்கும் ஆதாரபூதமாய் விளங்கும் வாஸ்துபுருஷரையும்

இரவு மற்றும் பகலில் நடமாடும் அனைத்துயிர்களையும் பாதுகாக்கும் விச்வே தேவர்களையும், பித்ருக்களையும் மற்றும் எல்லாவற்றையும் தழைக்கச் செய்யும் எல்லாவிதமான பூதங்களையும் நினைத்து அவற்றின் நிமித்தமாய் பலி இடுவதே பூத யக்ஞம் எனப்படுகிறது. அதற்குப் பிறகு, பறவைகளுக்கும், கிருமிகளுக்கும், மிருகங்களுக்கும் மற்றும் ஏதேனும் ஒரு வியாதியாலோ, பாவத்தாலோ, துர்ப்பாக்கியத்தாலோ, மனித சமூகத்திலிருந்து வெளிப்பட்டு வாழும் மனிதர்களுக்கும் போஜனம் அளிப்பது பூத யக்ஞத்தின் மிக முக்கியமான ஒரு அங்கமாகும். இவ்வாறு பூத யக்ஞம் முழு படைப்பையும் கிருகஸ்தனின் இயல்பான பராமரிப்பினுள் அடக்குகிறது போலும்.

பூத யக்ஞம் என்பது கவனத்துடனும் அன்புடனும் அனைத்துப் பூதங்களையும் நினைத்து அவற்றைப் பராமரிக்கும் முயற்சியே ஆகும். தேவ யக்ஞத்தில் தேவர்களின் பொருட்டு வைக்கப்படும் அன்னம் அக்னியில் ஹோமம் வளர்த்து அளிக்கப்படுகிறது. ஆனால் பூத யக்ஞத்தில் பூதங்களுக்கென எடுக்கப்பட்ட அன்னமானது ஆகாயத்தில் உயர எறியப்படுகிறது, அல்லது மிகுந்த கவனத்துடன் பூமியில் வைக்கப்படுகிறது. இதன் மூலம் அந்த பூதங்களோ அல்லது அவற்றின் பிரதிநிதிகளோ அந்த அன்னத்தை சுகமான சாந்தியுடன் புசிக்க இயலும். மனுஸ்ம்ருதியும் மற்ற தரும சாஸ்திரங்களும் பூத யக்ஞத்தில், கிருமிகள், பறவைகள், மிருகங்கள் மற்றும் சமூகத்திற்கு வெளிப்பட்ட மனிதர்கள், இவர்களுக்கென அளிக்கப்படும் அன்னம் பூமியில் மிகுந்த அக்கறையுடனும், கவனத்துடனும் தூசியோ, அழுக்கோ இன்றி நல்ல முறையில் சிரத்தையுடன் அளிக்கப்பட வேண்டும் என்ற எச்சரிக்கையுடன் கட்டளையிடுகின்றன. ஆபஸ்தம்ப தர்ம சூத்திரம் பலியிடப்படும் அன்னத்தைப் பூமியில் இடுவதற்கு முன்னால் பூமியை நன்கு துடைத்துச் சுத்தம் செய்து நீர் தெளிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை விதிக்கிறது[19]. இவ்விஷயத்தில் மனுஸ்ம்ருதி 'சனைகர் நிர்வபேத்புவி' என்ற வாக்கியத்தில், விசேஷ கவனத்துடன் அன்னமிடுமாறு உபதேசிக்கிறது.

மனுவின் இவ்விதிமுறையை விளக்கும் மேதாதிதி, 'உணவை பூமியில் இடுமாறு கூறும் இவ்விதிமுறையின் பொருள் அதைத் தகுந்த பாத்திரத்தில் இடக்கூடாதென்பது அல்ல' என்று தெளிவுபடுத்து

[19] ஆபஸ்தம்ப 2.3.15, ப. 188

கிறார். பலியின் அன்னத்தை ஏற்போருக்கு நேரடியாகத் தன் கைகளி லிருந்து அளிக்காமல், ஏற்போர் எளிதாக அடையக் கூடிய இடத்தில் வைக்க வேண்டும் என்பதே மனுவின் கருத்து என்கிறார் மேதாதிதி. 'பறவைகளுக்கு இடப்படும் பலியாவது, நாய்களும் மற்றவைகளும் தொல்லை அளிக்காத வண்ணம் பறவைகள் பயமின்றி உண்ணுமாறு அவைகளுக்கு ஏற்ற இடத்திலும் மற்றும் கிருமிகளுக்கு அளிக்கப் படும் பலியை அவை இனப்பெருக்கம் செய்யும் இடத்திலும் கவ னித்து இடவேண்டும்' என்றும் மேதாதிதி கூறுகிறார்.

## மனித யக்ஞம்

பித்ருக்கள், தேவர்கள் மற்றும் அனைத்துப் பூதங்களுக்கும் இவ்வாறு முறையுடன் அவரவர் பங்கை அளித்து அவர்களைத் திருப்தி செய்த பிறகே அன்னம் மனித சமூகம் பயன்படுத்தும் தகுதியைப் பெறுகிறது. ஆனால் யக்ஞம் செய்து பிறகு மிஞ்சும் இந்த அன்னத்தைத் தன் பரிவாரத்துடன் சேர்ந்து புசிப்பதற்கு முன்னர், கிருகஸ்தன் யாசகர் களையும், அதிதிகளையும் மற்றும் பிருத்யர்களையும், தன்னையே பற்றுக்கோடாய்க் கொண்டுள்ளோரையும், திருப்தி செய்ய வேண் டும். யாசகர்க்கும், அதிதிகளுக்கும், பிருத்யர்களுக்கும் சிரத்தையு டனும், முறையுடனும் அன்னத்தைப் பங்கிட்டு அளிப்பதே மனித யக்ஞமாகும்.

### பிக்ஷை

பஞ்ச யக்ஞங்களுள், மனு, மனித யக்ஞத்தையே மிக விஸ்தார மான விதிமுறைகளுடன் வரையறுத்துள்ளார். இந்த விதிமுறைகளின் முதல் கட்டமாக யாசகர்களுக்குப் பிக்ஷை இடுவதையே குறிப்பிடு கிறார்[20]:

कृत्वैतद्बलिकर्मैवमतिथिं पूर्वमाशयेत् ।
भिक्षां च भिक्षवे दद्याद्विधिवद् ब्रह्मचारिणे ।
यत्पुण्यफलमाप्नोति गां दत्त्वा विधिवद्गुरोः ।
तत्पुण्यफलमाप्नोति भिक्षां दत्त्वा द्विजो गृही ॥

[20] மனுஸ்ம்ருதி 3.94-95, ப. 107-8

பலி கருமத்தின் பிறகு, தான் போஜனம் செய்வதற்கு முன்பாக அதிதிகளுக்கு போஜனமும் பிக்ஷுக்களுக்கு பிக்ஷையும் அளிக்க வேண்டும். பிரமச்சாரி பிக்ஷுக்களுக்குப் பிக்ஷை அளிக்கையில் விசேஷமான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இவ்வகையில் யாசகர்களுக்குப் பிக்ஷையளிக்கும் துவிஜனான கிருகஸ்தன், தன் குருவிற்கு முறைப்படி அளிக்கும் கோதானத்தால் பெறக் கூடிய புண்ணியத்திற்கு ஒப்பான பலனை அடைகிறான்.

பிக்ஷையென்பது வாயிலில் வந்து யாசிப்போர்க்கு அளிக்கும் சொற்ப அளவினதேயான அன்னதானமாகும். இந்த பிக்ஷை அளிக்கும் கருமம் அதிதி உபசாரத்திலிருந்து வேறுபட்டதாகும். அதிதி பூஜையில், அதிதியை இல்லத்தினுள் வரவேற்று, இருக்கையளித்து, அர்க்கியமும், பாத்தியமும் அளித்து பின்னர் சிரத்தையுடன் வயிறார போஜனம் அளிப்பது முறையாகும். ஆனால், பிக்ஷையில் யாசிப்போருக்கு அவர்களது போஜனத்தின் ஒரு சிறு அம்சத்தை வழங்குவதே முறையாகும். பிரமச்சாரிகளும் சன்னியாசிகளும் எந்த ஒரு கிருகஸ்தனிடமிருந்தும் ஒரு கைப்பிடி அளவு அன்னத்தை விட அதிகமாய் ஏற்பது தகாதது என்பது அவர்களுக்கு விதிக்கப்பட்ட நியமமாகும். 'கைப்பிடி அன்னமே பிக்ஷை. இத்தொன்மையான பழக்கம் கிருகிணிகள், இல்லத்தரசிகள், நன்கு அறிந்ததே' என்கிறார் மேதாதிதி. மனுஸ்ம்ருதியின் மற்றொரு புகழ்பெற்ற உரையாசிரியரான குள்ளுக பட்டர், ஸ்ம்ருதியின் இப்பகுதியை விளக்குகையில், 'ஒரு கவளம் அன்னம் அளிப்பதே பிக்ஷை. ஆனால் சந்தர்ப்பத்திற்கேற்ப, தேவைப்பட்டால் இதைவிட அதிக அளவும் கொடுக்கப்படலாம்' என்கிறார்.

மேதாதிதி மேலும் தெளிவுபடுத்துவதாவது, தனது கிருகத்தின் வாயிலில் தோன்றும் அனைத்து பிக்ஷுக்களுக்கும் பிக்ஷை அளிப்பது கிருகஸ்தனின் அவசியமான கடமையாகும். தனக்கென வகுக்கப்பட்ட தன்னுடைய கிளை அல்லது பரம்பரை வழி வந்த வித்தையை முறைப்படி அத்தியயனம் செய்யும் பிரமச்சாரி பிக்ஷுவிற்கு விசேஷமான விதிமுறைகளுடன், அவர்களுக்கு ஸ்வஸ்திவசனங்களை, முறைப்படி மங்கல ஆசிகளை, வழங்கி, பிக்ஷையளித்தல் வேண்டும். ஏனையோருக்கு பிக்ஷையளிக்கையில் இத்தகைய ஸ்வஸ்திவாசனம் முதலானவை அவசியமன்று. ஆனால் பிக்ஷைக்கு வருவோர் யாராக

இருப்பினும், அவர் பாகண்டர் அல்லது ஆஷாடபூதியாக இருந்தாலும் அன்னம் அளித்தல் அவசியமாகும் என்று மேதாதிதி விளக்குகிறார்.

ஸ்ம்ருதியின் அடுத்து மூன்று சுலோகங்களில் மனு, பிக்ஷை பெறுவோரிடத்தில் எப்போதும் பணிவுடனும் சிரத்தையுடனும் பிக்ஷை அளிக்க வேண்டிய நியமனத்தை உபதேசிக்கிறார். மோக வசத்தால் யாசகருக்கு அவமதிப்புடனும் அலட்சியத்துடனும் அளிக்கப்படும் தானமானது தானமளிப்போரின் ஹோமம், ஸ்ரார்த்தம் முதலான புண்ணிய கருமங்கள் அனைத்தையும் பலனற்றதாக்கி விடும் என்று எச்சரிக்கிறார். மேலும் பிக்ஷையளிப்பது யாசகரின் முகத்தில் விளங்கும் அக்னியில் ஹோமம் வளர்ப்பதற்குச் சமானமாகும் என்பது மனுவின் கருத்து. முறைப்படி செய்யப்பட்ட இந்த பிக்ஷாஹோமம் இகலோகத்தில் பீடிக்கும் வியாதி, ராஜபீடை மற்றும் சத்ருபீடை போன்ற இடர்களைத் தவிர்த்து பாவங்களிலிருந்து விடுவித்து நற்கதியையும் அளிக்கவல்லது.

### அதிதி

வீட்டு வாயிலில் தென்படும் அனைத்து பிக்ஷுகளுக்கும் சிரத்தையுடனும் மரியாதையுடனும் பிக்ஷை அளிக்க வேண்டிய நியமனத்தை விளக்கிய பின்னர், மனு, மனுஷ்ய யக்ஞத்தின் அடுத்த கட்டமான அதிதி உபசாரத்தை விளக்குகிறார். இங்கு மனுவின் கட்டளை இதுவே[21]:

संप्राप्ताय त्वतिथये प्रदद्यादासनोदके ।
अन्नं चैव यथाशक्ति संस्कृत्य विधिपूर्वकम् ॥

இல்லத்திற்கு வருகை தரும் அதிதிக்கு முகம், கைகள் சுத்தம் செய்ய நீரும், அமருவதற்கு ஆசனமும் அளித்து அதன் பின்னர் இயன்ற அளவிற்கு அந்த அதிதிக்குச் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட அன்னத்தை முறையுடன் அளிக்க வேண்டும்.

மனுவின் இந்த சுலோகத்தை விளக்கும் மேதாதிதி, இவ்விடத்தில் அழைக்காமல் தானே வருகை தரும் ஒருவரே அதிதி; அழைப்பு விடுத்து வீட்டிற்கு வரும் உறவினர், தோழர், குரவர் முதலானோர்

[21] மனுஸ்ம்ருதி 3.99, ப. 111

அதிதிகள் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறார். அழையாமல், அறிமுகம் அற்றவராய் இல்லத்திற்கு வருகை தருபவரே அதிதி என்று அதிதிக்கான இலக்கணத்தை மனுவே பின்னர் வரையறுக்கிறார். இவ்வாறு அழையாது, அறிமுகமற்று இல்லத்திற்கு வருகை தருபவரையும் மரியாதையுடன் உபசாரம் செய்து முறையுடன் போஜனம் அளிப்பதில் மனுஷ்ய யக்ஞத்தின் இப்பகுதி நிறைவடைகிறது. முன் பின் அறியாத ஒரு அதிதிக்கு தகுந்த மரியாதையுடன் போஜனம் அளிக்க வேண்டிய நியமம் அனைத்து கிருகஸ்தர்களுமே, ஏன் மிக மிக எளிய வாழ்க்கை வாழும் கிருகஸ்தர்கள் கூட கடைப்பிடிக்க வேண்டிய அவசியமானக் கோட்பாடு என்று மனு கட்டளையிடுகிறார். ஏனெனில் ஒரு அதிதி உபசரிக்கப்படாமல் திரும்பச் சென்றால் கிருகஸ்தனின் அனைத்துப் புண்ணியங்களும் நசித்துப் போகும் என்கிறார் மனு [22]:

शिलानप्युञ्छतो नित्यं पञ्चाग्नीनपि जुह्वतः ।
सर्वं सुकृतमादत्ते ब्राह्मणोऽनर्चितो वसन् ॥

பிராமண அதிதியானவர் தான் யாருடைய இல்லத்தில் சிரத்தையுடன் சற்காரமும், உபசாரமும் பெறவில்லையோ, அத்தகையவரிடமிருந்து எல்லாப் புண்ணியங்ளையும் பறித்து விடுகிறார். உஞ்சவிருத்தியே செய்து ஜீவனம் நடத்தும் கிருகஸ்தரானாலும் சரி; அல்லது தினமும் சாஸ்திரத்தை அனுசரித்து பஞ்சாக்னிகளில் ஹோமம் செய்யும் கிருகஸ்தரானாலும் சரி, இல்லத்திற்கு வந்த பிராமணரை ஏற்ற முறையில் விருந்தோம்பி உபசாரம் செய்யவில்லையெனில் அந்த கிருகஸ்தர் அனைத்து நற்கருமங்களின் புண்ணியத்தையும் இழந்து விடுகிறார்.

ஒரு தரித்திர நிலையில் உள்ள கிருகஸ்தனின் வீட்டில் அன்னம் குறைவுபடலாம். ஆனால் அதிதியை அன்பு உபசாரம் செய்வதில் ஒரு போதும் குறை ஏற்படக் கூடாது என்பதே மனுவின் கட்டளை [23]:

तृणानि भूमिरुदकं वाक्चतुर्थी च सूनृता ।
एतान्यपि सतां गेहे नोच्छिद्यन्ते कदाचन ॥

நல்லொழுக்க சீலரின் இல்லத்தில் பூமியில் அமருவதற்கு இடமும், ஸ்நானம் முதலியவற்றிற்கான நீரும், உறங்குவதற்கு வைக்

[22] மனுஸ்ம்ருதி 3.100, ப. 111
[23] மனுஸ்ம்ருதி 3.101, ப. 113

கோல் படுக்கையும், நான்காவதாக மனதிற்குகந்த இன்சொல் லும் ஒருபொழுதும் வற்றாது.

**அதிதியும் அப்யாகதரும்**

இவ்வாறு இல்லத்தை அணுகும் அதிதியை அன்பு உபசாரத்துடன் வரவேற்க வேண்டும் என்ற மீற முடியாத கட்டளையை விளக்கிய மனு, அதிதியின் இலக்கணத்தை வரையறுக்கையில், அதிதியென அழைக்கத் தகுந்தவர் யார் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். மனுவின் இலக்கணப்படி அதிதியின் முக்கிய தன்மைகள் இரண்டே . முத லாவது, அவர் வருகைக்கென்று குறிப்பிட்ட நேரமொன்றும் இல்லா தது. இரண்டாவது, அவர் கிருகஸ்தனுக்கு எந்த விதத்திலும் உறவின ராகவோ அல்லது பரிச்சயம் உள்ளவராகவோ இல்லாதது. ஸ்ம்ருதி யின் வாக்கியங்களில்[24]:

एकरात्रं तु निवसन्नतिथिर्ब्राह्मणः स्मृतः ।
अनित्यं हि स्थितो यस्मात्तस्मादतिथिरुच्यते ।
नैकग्रामीणमतिथिं विप्रं सांगतिकं तथा ।
उपस्थितं गृहे विद्याद्भार्या यत्राग्नयोऽपि वा ।।

கிருகத்திற்கு வருகை தந்து ஓர் இரவு தங்கும் பிராமணர் அதிதி என்று அழைக்கப்படுவார். அவர் தங்குவது அநித்யமானதாயும், குறைவான காலப்பொழுதைக் கொண்டதாகவும் இருப்பதா லேயே அவர் அதிதி என்றழைக்கப்படுகிறார்-'அநித்யம் ஸ்தித: அதிதி:.' கிருகஸ்தனின் கிராமத்தையே சேர்ந்த எந்த விப்ரரும் அதிதி ஆகமாட்டார். கிருகஸ்தனின் பத்தினி மற்றும் கிருஹ் யாக்னியைச் சார்ந்த கிராமத்தினரும் அதிதி அல்ல. கிருகஸ்தனின் நண்பர்கள், சகபாடிகள், அல்லது பரிச்சயமான எவருமே அதிதி அல்ல. இவர்கள் அனைவரும் தகுந்த உண்ணும் வேளையில் இல்லத்திற்கு வந்தாலும் கூட அவர்களை அதிதி என்று கூற வியலாது.

இங்கு அதிதி இலக்கணத்தை வரையறுக்கும் மனு பிராமணரை மட்டுமே அதிதி என்று கூறியுள்ளார். பின்னர், அதிதியின் வருணத் தைக் குறித்து தனிப்பட்டு விவரிக்கும் மனு, பிராமண கிருகஸ்தனின்

[24] மனுஸ்ம்ருதி 3.102-103, ப. 113-14

இல்லத்தில் பிராமணரைத் தவிர மற்ற வருணத்தாரை அதிதி என்று அழைப்பதற்கில்லை என்று குறிப்பிடுகிறார். ஆனால் உடனே அவர் பிராமண கிருகஸ்தனானவன், போஜன காலத்தில் தன் வீட்டிற்கு வரும் க்ஷத்திரியர், வைசியர் மற்றும் சூத்திரரை மரியாதையுடன் வரவேற்று உபசரித்து முறைப்படி போஜனம் அளிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார். மனுஸ்ம்ருதியின் வரிசைக் கிரமத்தைப் பின்பற்றி நாம் அதிதியின் வருணத்தைப் பற்றி மீண்டும் பிறகு காண்போம்.

இங்குக் குறிப்பாகக் கவனிக்கத்தக்க விஷயம் அதிதியின் வருணத்தைப் பற்றியதல்ல; ஆனால், உணவும் உறைவிடமும் வேண்டி வரும் அழையாத, அறிமுகமில்லாத ஒருவரே அதிதியெனும் தகுதி பெற முடியும் என்று மனு வரையறுப்பதே. பாரதத்தின் புராதன இலக்கியங்கள் அனைத்திலும் உள்ள அதிதியைப் பற்றின அடிப்படைக் கருத்தும் இதுவே. மனுஷ்ய யக்ஞத்தின் ஒரு அங்கமான அதிதி பூஜையாவது, அழையாத, அறிமுகமற்ற யாசகரை மரியாதையுடன் உபசாரம் செய்து அன்னமளிப்பதிலேயே முழுமை பெறுகிறது. நட்பும், அன்பும் மேலிட இல்லத்திற்கு வருகை தருவோரும், அல்லது, அழைக்கப்பட்ட நண்பர்களும் உறவினர்களும் அதிதிகள் அல்லர்.

மஹாபாரதத்தில் யுதிஷ்டிரருக்கு அன்னதானத்தின் கோட்பாடுகளை விளக்கும் ஸ்ரீகிருஷ்ணர், அழைக்கப்படாமல் தானே இல்லத்தின் வாயிலில் தோன்றும் அறிமுகமற்ற யாசகருக்கும், அன்பும் நட்பும் கொண்டு இல்லத்திற்கு வருகை தரும் நண்பர், உறவினருக்குமிடையே உள்ள வேறுபாட்டை மிகத் தெளிவாக விளக்குகிறார். ஸ்ரீகிருஷ்ணர் கூறுவதாவது [25]:

अभ्यागतो ज्ञातपूर्वो ह्यज्ञातोऽतिथिरुच्यते ।

இல்லத்திற்கு வரும் நண்பர்களும், உறவினர்களும் 'அப்யாகதர்' என்றழைக்கப்படுகின்றனர். ஆனால், பரிச்சயமற்றவரே அதிதி என்றழைக்கப்படுகிறார். கிருகஸ்தனானவன் நிச்சயமாக அதிதி, அப்யாகதர் இருவரையும் மரியாதையுடனும் பரிவுடனும் உபசாரம் செய்ய வேண்டும். ஆனால் அதிதிக்கு ஆதரவளித்து போஜனம் முதலியன அளிப்பதே மனுஷ்ய யக்ஞத்தின் அவசியமான பகுதியாகும். அப்யாகதர் ஒருவிதத்தில் அந்த இல்லத்தைச் சேர்ந்தவரைப்

[25] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6329

போலவேயாம். அதிதி போஜனத்திற்குப் பிறகு அப்யாகதருக்கு இல்லத்தாருடன் சேர்த்து அமர்த்தி போஜனம் அளிப்பதே முறை யாகும் என்று மனு பிறகு விளக்குவதை நாம் காண்போம்.

**மாலைப் பொழுதில் தோன்றும் அதிதி**

பொழுது சாயும் வேளையில், அழையாத, எதிர்பாராத, பழக்க மற்ற அதிதி ஒருவரின் வருகை, அஸ்தமனமாகும் சூரியன் கிருகஸ் தனுக்கென வழங்கும் பெரும் நிதியைப் போன்றது என்கிறார் மனு. சாயும் காலத்தில் வருகை தரும் அத்தகைய அதிதியை விசேஷமாகச் சிரத்தையுடன் வரவேற்று உபசரிக்க வேண்டும் என்று மனு கட்டளை இடுகிறார்[26]:

अप्रणोद्योऽतिथिः सायं सूर्योढो गृहमेधिना ।
काले प्राप्तस्त्वकाले वा नास्यानश्नन्गृहे वसेत् ॥

*மாலையில் இல்லத்தின் வாயிலில் தோன்றும் அதிதி சாக்ஷாத் சூரிய பகவானால் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டவர் ஆவார். அவரை ஒருகாலும் திருப்பி அனுப்பக் கூடாது. தகுந்த காலத்தில் வந்தாலும், அல்லது அகாலத்தில் வந்தாலும் அவரை உணவினால் திருப்தி செய்யாது உறங்க வைக்கக் கூடாது.*

மனுவின் இக்கோட்பாட்டை விளக்கும் மேதாதிதி, 'இங்குத் தகுந்த காலம் என்பதன் பொருள் போஜன காலம் என்றும், அகாலம் என்பது சாயங்கால போஜனம் முடிவுற்று, அன்றைய தினம் சமைக்கப்பட்ட உணவு முடிவடைந்த சமயமாகும்' என்கிறார். அந்நிலையில் புதியதாக உணவு சமைத்து அதிதியைத் திருப்தி செய்யவேண்டும் என்கிறார் மேதாதிதி. மனு 'இவ்வாறு நேரங்கழித்து வரும் அதிதிக்கு மீண்டும் உணவு ஆக்க வேண்டும்' என்று தாமே கட்டளை இடுவதையும் நாம் பின்னர் காண்போம்.

நமது பண்டைய நூல்கள் அனைத்தும் அந்திப் பொழுதில் வரும் அதிதியின் வருகையை விசேஷமுடையதாகவும், மங்களகரமானதா கவும் கருதுகின்றன. சூரியன் அஸ்தமித்து, இருள் சூழப் போகும் தறுவாயில் வரும் அதிதியின் உறைவிடம் மற்றும் உணவின் தேவை அதிகமானதே. இத்தகைய அதிதிக்கு முறையான ஆதரவும் உபசா

---

[26] மனுஸ்ம்ருதி 3.105, ப. 116

ரமும் அளிக்க வேண்டும் என்ற கோட்பாடு மிகவும் ஆணித்தரமாகக் கூறப்படுகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணமும் இதை வலியுறுத்துகிறது. 'சூரியபகவான் மறைந்த பின்னர் தோன்றும் அதிதியை வீட்டு வாயிலிலிருந்து திருப்பி அனுப்பும் பாவச் செயலானது, பகல் நேரத்தில் அதிதியைத் திருப்பி அனுப்பியதன் பாவத்தை விட எட்டு மடங்கு கூடுதலாகும்.'[27] இச்சந்தர்ப்பத்தில், ஸ்ரீ விஷ்ணுபுராணம் இடும் மற்றொரு கட்டளை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்: ஒரு கிருகஸ்தன் தான் உண்பதற்கு முன், ஒரு 'கோதோஹ'க் காலம், ஒரு பசுவினிடமிருந்து பாலைக் கறந்து பெறும் கால அளவாவது, தன் இல்லத்தின் வெளியே நின்று அதிதியை எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டும்[28].

**விருந்தோம்பல்**

மனுஸ்ம்ருதியின் அடுத்த மூன்று சுலோகங்கள் அதிதிக்குப் போஜனம் அளிக்க வேண்டிய முறையை வருணிக்கின்றன. விருந்தோம்பலின் முக்கிய அங்கமானது அதிதிக்கு இல்லத்திலுள்ள மிகச் சிறந்த உணவையே அளிக்க வேண்டும் என்பதே. சிறப்பான உணவை அதிதிக்கு வழங்காமல் கிருகஸ்தன் அதனைத் தன்னுடைய போஜனத் திற்கென எடுத்து வைப்பது தகாததாகும். இதைப் பற்றிய மனுவின் கட்டளை[29]:

न वै स्वयं तदश्नीयादतिथिं यन्न भोजयेत् ।
धन्यं यशस्यमायुष्यं स्वर्ग्यं वाऽतिथिपूजनम् ॥

கிருகஸ்தனானவன் அதிதிக்கு அளிக்காத எவ்வித நல்லுண வையும் தான் உண்ணக் கூடாது. அதிதியைச் சிரத்தையுடன் உபசாரம் செய்யும் கிருகஸ்தன் மிகுந்த செல்வத்தையும், பெரும் புகழையும், நீண்ட ஆயுளையும், இறுதியில் சுவர்க்கத்தையும் அடைகிறான்.

மனுவின் இக்கோட்பாட்டை விளக்கும் மேதாதிதி, சத்துள்ள சூபம், தயிர், நெய், சர்க்கரை முதலான உயர்ந்த உணவை அதிதிக்குப் படைக்காது, ஒரு கிருகஸ்தன் தான் மட்டும் உண்ணுதல் கூடாது என்கிறார். ஆனால் இல்லத்தில் உடல் நலம் சரியில்லாதவர்க்கென

[27] விஷ்ணு 3.11.108, ப. 237
[28] விஷ்ணு 3.11. 58, ப. 233
[29] மனுஸ்ம்ருதி 3.106, ப. 117

ஆக்கப்படும் கஞ்சி வகைகளை அதிதி விரும்பினால் அன்றி அவருக்கு வற்புறுத்தி அளிக்கவேண்டிய அவசியமில்லை.

விருந்தோம்பும் பண்பினை விவரிக்கும் மனு, பல அதிதிகள் ஒரே நேரத்தில் வர நேர்ந்தால் அவர்களை அவரவரது குணத்திற்கும், சிறப்பிற்கும் தகுந்தபடி விருந்தோம்புமாறு கட்டளையிடுகிறார்[30] :

आसनावसथौ शय्यामनुव्रज्यामुपासनम् ।
उत्तमेषूत्तमं कुर्याद्धीने हीनं समे समम् ॥

சிறந்த அதிதிக்குச் சிறந்த ஆசனமும், சிறந்த உறைவிடமும் , சிறந்த உறங்குமிடமும், சிறந்த உபசாரமும் அளிக்க வேண்டும். இத்தகைய அதிதி விடைபெறும் பொழுது கிருகஸ்தன் நீண்ட தூரம் அதிதியுடன் துணை சென்று விடை கொடுத்தல் வேண்டும். மத்யமமான அதிதிக்கு இவ்வனைத்தையும் சாதாரண முறையில் செய்தல் வேண்டும், ஹீனனான அதிதிக்கு இவ்வுபசாரங்கள் அனைத்தையும் அதற்கு ஏற்றவாறே செய்தல் வேண்டும்.

மேதாதிதியும், குள்ளுகரும் 'சிறந்த நிலை, மத்திம நிலை, ஹீன நிலை என்ற இந்த பாகுபாடுகள் பல அதிதிகள் ஒரே நேரத்தில் வருகை தரும் தருணத்தில் மட்டுமே பொருந்தக் கூடியதாம்' என்று தெளிவாகக் கூறுகின்றனர். இத்தகைய நிலையில் அனைவருக்கும் ஒரே முறையில் விருந்துபசாரம் செய்வது அதிதிகளுக்குக் கூச்சத்தை ஏற்படுத்தக்கூடும். இந்நிலையில் விருந்தோம்பும் கிருகஸ்தன் அதிதிகளின் குணாதிசயங்களை உணர்ந்தறிந்து, அதற்கேற்றாற் போல் மரியாதையுடன் ஆதரவுபசாரம் செய்து, ஒருவரும் மனம் கோணாதவாறு நடந்து கொள்ள வேண்டும்.

அதிதிக்குப் போஜனம் வழங்கவேண்டிய விதிமுறையை விவரித்த பின்னர், மனு, உணவு முடிவடைந்த பிறகு வருகை தரும் அதிதிக்கு மீண்டும் புதியதாக அன்னம் ஆக்க வேண்டிய நியமத்தை உபதேசிக்கிறார். இதைப் பற்றிய சில குறிப்புகளைச் சிறிது முன்பே பார்த்தோம். மனுஸ்ம்ருதி கூறுவதாவது [31]:

वैश्वदेवे तु निर्वृत्ते यद्यन्योऽतिथिराव्रजेत् ।
तस्याप्यन्नं यथाशक्ति प्रदद्यान्न बलिं हरेत् ॥

[30] மனுஸ்ம்ருதி 3.107, ப. 118
[31] மனுஸ்ம்ருதி 3.108, ப. 119

விச்வே தேவர்களுக்கான ஹோமம் முதலான கருமங்கள் நிறைவடைந்து ஆக்கப்பட்ட அன்னம் முழுவதும் தீர்ந்த பிறகு இல்லத்திற்கு வருகை தரும் எந்த அதிதிக்கும் கிருகஸ்தன் மீண்டும் புதியதாக அன்னம் ஆக்கி, இயன்ற அளவு அந்த அதிதியைத் திருப்தி செய்ய வேண்டும். இவ்வாறு மீண்டும் ஆக்கப்பட்ட அன்னத்திலிருந்து தேவர்கள், பூதங்கள் முதலா னோருக்குப் பங்களிக்க வேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு அறிமுகமற்ற அழையா விருந்தாளியான அதிதிக்கு உணவளிக்கும் முறையை மிகவும் நுணுக்கத்துடன் விளக்குகிறது மனுஸ்ம்ருதி. ஆனால் இல்லத்திற்கு வருகை தரும் அதிதிகளும் சில ஒழுங்கு ஆசாரங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் மனு. மனுஸ்ம்ருதியில் ஒரு சிறிது முன்னமே இரண்டு சுலோகங்களில், மனு இதைப் பற்றிய கட்டளையை விதித்துள்ளார்: கிருகஸ்தாசிரமத்தில் நிலைபெற்றுள்ள எந்த ஒரு கிருகஸ்தனும் மற்ற கிருகஸ்தர்களின் இல்லங்களில் உணவு பெறுவதைத் தன் வழக்கமாகக் கொள்ளக் கூடாது. வேறொரு வீட்டில் உண்ணும் ஒழுக்கத்தைக் கொள்ளும் கிருகஸ்தனானவன் தன் அனைத்துத் தவம் மற்றும் அத்தியயனத்தின் பலனை இழந்தவனாகி மறுபிறவியில் வீட்டு விலங்காய்ப் பிறக்கக் கடவான். மேலும், விருந்தோம்பும் கோட்பாட்டை விளக்கிய பிறகு, மனு, மீண்டும் அதிதிகளுக்கான நியமத்தை எடுத்துரைக்கிறார். அவர் கூறுவதாவது [32]:

न भोजनार्थं स्वे विप्रः कुलगोत्रे निवेदयेत् ।
भोजनार्थं हि ते शंसन्वान्ताशीत्युच्यते बुधैः ॥

அன்னபானங்கள் பெறுவதற்காக ஓர் விப்ரன் தன் குலகோத்திரங் களை வெளியிடுதல் கூடாது. யார் ஒருவன் உணவிற்காகத் தன் குலம், கோத்திரங்களைப் புகழ்ந்து கொள்கிறானோ அவன் சான்றோர்களால் 'வாந்தாசி', ஈனமான அன்னத்தை உண்பவன், என்று கூறப்படுகிறான்.

மஹாபாரதத்தில் இதற்கு முரணான ஓர் கோட்பாடும் உபதேசிக் கப்படுகிறது. அதிதி தன் குல கோத்திரங்களை வெளியிடுதல் கூடாது என்பது மனுவின் கட்டளை. மாறாக, மஹாபாரதத்தில், வைஷ்ணவ

[32] மனுஸ்ம்ருதி 3.109, ப. 120

தர்ம பர்வத்தில், ஸ்ரீகிருஷ்ணர் யுதிஷ்டிரருக்கு, விருந்தோம்பும் கிருகஸ்தனானவன் அதிதியின் குல கோத்திரங்களையும் கல்வியையும் கேட்டறிதல் கூடாதென்று உபதேசிக்கிறார். நாம் முன்னமே கண்டுள்ள ஸ்ரீகிருஷ்ணரின் இந்த ஆக்ஞையாவது [33]:

न पृच्छेद् गोत्रचरणं नाधीतं वा कदाचन।

### பிராமணரல்லாத அதிதிகள்

அதிதியுபசாரக் கோட்பாடுகளை வரையறுத்த பிறகு, மனு அதிதியின் வருணத்தைப் பற்றிய தம் கருத்தைத் தெளிவாக விளக்குகிறார் [34]:

न ब्राह्मणस्य त्वतिथिर्गृहे राजन्य उच्यते।
वैश्यशूद्रौ सखा चैव ज्ञातयो गुरुरेव च॥

ஒரு பிராமண கிருகஸ்தனின் இல்லத்திற்கு வருகை தரும் ஒரு க்ஷத்திரியர் அதிதி என்று அழைக்கப்பட மாட்டார். வைசியரும், சூத்திரரும் அவ்வாறே. இதைப் போல், இல்லத்திற்கு வருகை தரும் நண்பரும் உறவினரும் குருவும் கூட அதிதி என்று அழைக்கப்பட மாட்டார்.

நண்பரோ, குருவோ, உறவினரோ அல்லது மற்ற பரிச்சயமானவரோ அதிதியல்ல என்பதை மனு தொடக்கத்திலேயே ஐயமறக் கூறியுள்ளார். ஆனால் பிராமண கிருகஸ்தனின் இல்லத்தில் வருகை தரும் இதர வருணத்தார் யாவரும் அதிதி அன்று என்ற கொள்கை பஞ்சமகாயக்ஞத்தின் அடிப்படைக் கருத்துகளுக்கு முரண்பாடாகவே காணப்படுகிறது. ஒரு கிருகஸ்தன் படைப்பின் அனைத்து ஜீவன்களின் வாழ்க்கை நிர்வாகத்தைப் பற்றிய தன் பொறுப்பை உணர்ந்து அனைவரையும் பேணிப் போஷிப்பதன் மூலம் அப்பொறுப்பினை நிறைவேற்றுவதிலேயே பஞ்சமகாயக்ஞக் கோட்பாட்டின் சாரம் அடங்கியுள்ளது. பின் தன் இல்லத்திற்கு வருகை தரும் பிராமணர் அல்லாத ஒருவரை இந்த ஆதரவையும், சற்காரத்தையும் பெறும் உரிமையிலிருந்து எவ்வாறு விலக்கி வைக்க முடியும்?

ஆனால் மனு, ஒரு பிராமண கிருகஸ்தனுக்கு, பிராமணரல்லாத ஒருவர் வருகை தந்தால் அவருக்கு உபசாரம் செய்து வசதியும் உணவும்

[33] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6355
[34] மனுஸ்ம்ருதி 3.110, ப. 120

வழங்க வேண்டிய கடமையிலிருந்து விலக்கு அளிக்கவில்லை. பிராமணரல்லாதவர் அதிதி அல்ல எனும் மனுவின் மொழி ஒரு இலக்கணக் குறிப்பாகவே தோன்றுகிறது. இந்த இலக்கணத்தை வரையறுத்த உடனேயே மனு, வருகை தரும் அனைத்து வருணத்தாரையும், மற்றும் நண்பர்கள், உறவினர்களையும் முறையுடன் பேணிப் போற்றி மேலும் அவர்களுக்கு முறையான கிரமத்தில் போஜனம் வழங்க வேண்டும் என்று கட்டளை இடுகிறார். மனுவின் ஆதேசமாவது [35]:

यदि त्वतिथिधर्मेण क्षत्रियो गृहमाव्रजेत् ।
भुक्तवत्सु च विप्रेषु कामं तमपि भोजयेत् ।
वैश्यशूद्रावपि प्राप्तौ कुटुम्बेऽतिथिधर्मिणौ ।
भोजयेत्सह भृत्यैस्तावानृशंस्यं प्रयोजयन् ।
इतरानपि सख्यादीन्संप्रीत्य गृहमागतान् ।
प्रकृत्यान्नं यथाशक्ति भोजयेत्सह भार्यया ॥

ஒரு பிராமண கிருகஸ்தனின் கிருகத்திற்கு ஒரு க்ஷத்திரியர் அதிதி தருமத்துடன் வருகை தந்தால் அவருக்கு, விப்ர அதிதிகளுக்கு உணவளித்த பிறகு அவர் மனம் நிறையுமளவும் உணவு அளித்தல் வேண்டும். இவ்வாறு வைசியரும், சூத்திரரும் அதிதி தருமத்துடன் பிராமண குடும்பத்திற்கு வருகை தந்தால், அவர்களுக்கும் பிருத்யர்களுடன் உதாரமாய் உணவளித்தல் வேண்டும். மேலும், அன்பு மேலீட்டால் கிருகத்திற்கு வரும் நண்பர்கள் முதலானவர்களுக்குக் கிருகஸ்தன் தன் பத்தினியுடன் தன்னால் இயன்ற அளவு உணவளிக்க வேண்டும்.

மேதாதிதி, மனுவின் இக்கோட்பாடுகளை விரிவு படுத்துகையில், மேலும் கூறுவதாவது: தாம் கொணர்ந்த ஆற்றுணாவும் வற்றியவராய், போஜன காலத்தில் மற்றொரு கிராமத்திலிருந்து வருகை தரும் ஒவ்வொரு வழிப்போக்கரும் அதிதி தருமத்துடன் வந்தவர் ஆவார் [36]:

तत्रातिथेर्धर्मः क्षीणपथ्योदनत्वं परग्रामवासो भोजनकालोपस्थानम् ।

[35] மனுஸ்ம்ருதி 3.111-113, ப. 121-23
[36] மனுஸ்ம்ருதி 3.111, மேதாதிதி உரை, ப. 121

இவ்வாறு அதிதி தருமத்துடன் வருகை தரும் பரிச்சயமற்ற அனை வருக்கும் முறைப்படி போஜனம் அளித்தல் வேண்டும்.

ஸ்ம்ருதியில் கூறப்பட்டுள்ள மற்றொரு கருத்தாவது, க்ஷத்திரி யர்க்குப் பிராமண அதிதிக்குப் பிறகும், வைசியர், சூத்திரர்களுக்குப் பிருத்யர்களுடனும் போஜனமளிக்க வேண்டும் என்பதாகும். இதை விளக்கும் மேதாதிதி, 'பிருத்யர்களுக்கு அதிதிகளுக்குப் பிறகு, ஆனால் கிருகஸ்த தம்பதிகள் உண்ணும் முன்னர், உணவளிக்கப்படு கிறது. எனவே, வைசிய மற்றும் சூத்திர அதிதிகளுக்கு பிருத்யர் களுடன் போஜனம் அளிப்பதன் பொருளாவது அவர்கள் மற்ற அதிதிகளுக்குப் பிறகு, ஆனால் கிருகஸ்த தம்பதிகளுக்கு முன்பு போஜனம் அடையும் உரிமை கொண்டவர் என்பதாகும்' என்று கூறுகிறார். மேலும் மேதாதிதி இச்சந்தர்ப்பத்தில், 'மனுஸ்ம்ருதியின் 'सह भृत्यैस्तौ' என்ற வாக்கியத்தின் பொருள் வைசிய மற்றும் சூத்திர அதிதிகளுக்கும் பிருத்யர்களுக்கும் முறையான போஜன காலம் மட்டுமே ஒன்றாகும் என்பதே' என்று தெளிவுபடுத்துகிறார்:

सहशब्द एककालतामात्रलक्षाणार्थः ।

இங்கு வைசியருக்கோ சூத்திரருக்கோ அளிக்க வேண்டிய ஆதரவு, உபசாரம் மற்றும் சம்மானத்தைப் பற்றிய சர்ச்சை எதுவும் இல்லை. ஆதரவு, உபசாரம் மற்றும் சம்மானம் அனைத்து அதிதிகளுக்கும் வழங் கப்பட வேண்டியதே. இல்லத்திற்கு வருகை தரும் அனைவரிடமும் வினயத்துடனும், கனிவுடனும் இன்சொல் கூறி வரவேற்பு நல்கும் விதியை எப்போதும் பின்பற்ற வேண்டும் என்றும் மேதாதிதி இச்சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

மனுஸ்ம்ருதியின் இந்த விளக்கம் அதிதியின் வருணத்தைப் பற்றிய பாரதத்தின் பண்டைய இலக்கியத்தின் உணர்வையே ஒத்திருக் கிறது. சாஸ்திரங்கள், பொதுவாக அதிதியின் வருணம் தொடர்பாக எவ்வித வேறுபாட்டையும் விதிக்கவில்லை. பெரும்பாலான சாஸ்தி ரங்களில் பிராமண அதிதியானவர் நிச்சயமாக விசேஷ சுபம் பொருந் தியவராகக் கருதப்படுகிறார். எனினும், எந்த வருணத்தைச் சார்ந்த வராயினும் வருகை தருபவர் அதிதியே என்று சாஸ்திரங்கள் கூறு கின்றன. தவிரவும், எந்த அதிதியாயினும், போஜன காலத்தில் வருகை தருவது ஒரு கிருகஸ்தனுக்கு மங்களகரமானதே. பராசரஸ்ம்ருதியில் இவ்விஷயத்தைப் பற்றி மிகத் தெளிவான கட்டளை விதிக்கப்

பட்டுள்ளது. 'வைச்வதேவ கர்மம் முடிந்த பிறகு, அதாவது, பித்ரு யக்ஞம், தேவ யக்ஞம், பூத யக்ஞம் இவற்றை நிறைவேற்றிய பிறகு போஜன காலத்தில் வருகை தருபவர் யாராக இருந்தாலும், அவர் அதிதி தான் ' என்பதே அக்கட்டளை[37]:

इष्टो वा यदि वा द्वेष्यो मूर्खः पण्डित एव वा ।
संप्राप्तो वैश्वदेवान्ते सोऽतिथिः स्वर्गसंक्रमः ॥

வைச்வதேவ கர்மம் நிறைவடைந்த பிறகு, இல்லத்திற்கு வருகை தரும் யாவரும் அதிதியென்றே கருதப்படுவார். இவ்வாறு போஜன காலத்தில் வருபவர் நண்பராக இருந்தாலும் பகைவராக இருந்தாலும், மூர்க்கனாக இருந்தாலும் பண்டிதராக இருந்தாலும் அவர் அதிதியே ஆவார். அவர் கிருகஸ்தனுக்கு சுவர்க்கத்தை அடைவதற்குரிய சாதனமாகவே விளங்குகிறார்.

பராசரஸ்ம்ருதியாவது, குறிப்பாக, தற்போதைய யுகத்தில் பின் பற்ற வேண்டிய ஸ்ம்ருதி கிரந்தமாகக் கருதப்படுகிறது. எனினும் பராசரஸ்ம்ருதியின் அதிதி பற்றிய மேற்கூறிய கோட்பாடானது மஹா பாரதத்தில் வைஷ்ணவ தர்ம பர்வத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் ஆதேசத் தையே எதிரொலிக்கிறது. ஸ்ரீகிருஷ்ணர் யுதிஷ்டிரருக்கு அதிதி உப சாரத்தைப் பற்றி உபதேசிக்கையில் இவ்வாறு கூறுகிறார்[38]:

हितः प्रियो वा द्वेष्यो वा मूर्खः पण्डित एव वा ।
प्राप्तो यो वैश्वदेवान्ते सोऽतिथिः स्वर्गसंक्रमः ॥

மேலும் ஸ்ரீகிருஷ்ணர் இச்சந்தர்ப்பத்தில் யுதிஷ்டிரருக்கு இவ் வாறு உபதேசிக்கிறார்: ஒரு கிருகஸ்தனின் இல்லத்திற்குக் களைப் புடன் வருகை தரும் அதிதியின் பின் எல்லா தேவதைகளும், பித்ருக்களும் மற்றும் அக்னியும் உடன் வருகிறார்கள். இல்லத்தில் அதிதிக்கு அளிக்கப்படும் ஆதரவு, உபசாரங்களினால் தேவர்களும், பித்ருக்களும் ஆதரவு, உபசாரங்களைப் பெறுகின்றனர். அதிதியா னவர் நிராசையுடன் இல்லத்திலிருந்து வெளியேற நேரிட்டால், அவர்களும் நிராசையுடனேயே கிருகஸ்தனின் இல்லத்திலிருந்து வெளியேறுகின்றனர். எனவே, சண்டாளனே அதிதியாக இல்லத்திற்கு

[37] பராசர 1.40, ப. 349
[38] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6330

வந்தாலும், கிருகஸ்தனானவன் அவ்வதிதியைப் பூஜிக்க வேண்டும் என்பதே ஸ்ரீகிருஷ்ணரின் கட்டளையாகும்[39]:

चाण्डालोऽप्यतिथिः प्राप्तो देशकालेऽन्नकाङ्क्षया ।

अभ्युद्गम्यो गृहस्थेन पूजनीयश्च सर्वदा ॥

அன்னத்தை அடைய வேண்டிய விருப்பத்துடன், தகுந்த இடத்திலும் காலத்திலும் ஒரு சண்டாளனே அதிதியின் உருவில் இல்லத்திற்கு வருகை தந்தாலும், அவன் கிருகஸ்தனால் எப்பொழுதும் பூஜிப்பதற்கு ஏற்றவனே. இவ்வாறு வரும் சண்டாள அதிதிக்கும் முறையுடன் ஆதரவும் உபசாரமும் அளிக்க வேண்டியது கிருகஸ்தனுக்கு இன்றியமையாததாகும்.

அக்னி, தேவர்கள், பித்ருக்கள் பின் தொடர கிருகஸ்தனின் இல்லத்திற்கு வரும் அதிதியைப் பற்றிய வருணனை மஹாபாரதத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. மேலும் சண்டாளனோ அல்லது ஸ்வபாகனோவான அதிதிக்கு அளிக்க வேண்டிய முறையான ஆதரவு, உபசாரங்களைப் பற்றிய உபதேசங்களும் பல இடங்களில் மீண்டும் மீண்டும் ஒலிக்கின்றன. வன பர்வத்தில் யுதிஷ்டிரருக்குத் தர்மோபதேசம் செய்யும் ரிஷி மார்க்கண்டேயர் இல்லத்திற்கு வரும் அதிதி எந்த வருணத்தைச் சார்ந்தவராயினும், கிருகஸ்தனுக்கு அவர் பிராமணரே ஆவார் என்றே கூறியுள்ளார்[40]:

अध्वनि क्षीणगात्रश्च पथि पांसुसमन्वितः ।

पृच्छते ह्यन्नदातारं गृहमायाति चाशया ।

तं पूजयाथ यत्नेन सोऽतिथिर्ब्राह्मणश्च सः ॥

தன் யாத்திரையில் களைப்புற்று, உடல் மெலிந்து தூசியினால் மிகவும் அழுக்கடைந்து, தாராளமாக அன்னமளிப்போரைத் தேடி இல்லத்திற்கு வரும் எந்த வழிப்போக்கனுக்கும் முயற்சியுடன் ஆதரமும் சற்காரமும் அளித்து பூஜிப்பது ஒரு கிருகஸ்தனுக்கு இன்றியமையாத கடமையாகும். இவ்வாறு இல்லத்திற்கு வருகை தரும் வழிப்போக்கர் அதிதி என்று அழைக்கப்படுகிறார். அவர் அந்த கிருகஸ்தனுக்கு நிச்சயமாக பிராமணரே ஆவார்.

[39] மஹாபாரதம் ஆச்வமேதிக 92, ப. 6329
[40] மஹாபாரதம் வன 200.60-61, ப. 1527

களைப்புற்று, பசியுடன் இல்லத்திற்கு வருகை தரும் அறிமுக மற்ற வழிப்போக்கருக்கு எப்பொழுதும் தகுந்த மரியாதையுடன் ஆதரவளித்து போஜனம் வழங்க வேண்டும். இது கிருகஸ்தனுக்கு மீற முடியாத நியமம். இந்த நியமத்தை, தருமநெறியில் ஒழுகும் கிருகஸ் தன் எப்பொழுதும் எந்த சூழ்நிலையிலும் பின்பற்றிப் பேண வேண்டும். இவ்வாறு செய்யும் கிருகஸ்தனுக்கு வருகை தருவோரின் வருணத்தைப் பற்றியோ அல்லது குல கோத்திரங்களையோ விசாரிக்க ஒருபொழுதும் உரிமை இல்லை. இல்லத்திற்கு எதிர்பார்ப்புடன் வருகை தரும் யாசகர் அனைவருக்கும் போஜனமும், ஆதரமும் அளிக்க வேண்டிய நியமமே மனுஷ்ய யக்ஞமாகும்.

இத்துடன் மனு விளக்கும் மனுஷ்ய யக்ஞ வருணனை பெரும்பா லும் நிறைவடைகிறது. ஆனால், யக்ஞத்தின் விதிமுறைகளை நிறை வேற்றிய பின் கிருகஸ்த தம்பதியினர் எஞ்சிய அன்னத்தை உட் கொள்ள வேண்டிய கோட்பாட்டை விளக்கும் முன், மனு, தன் இயல்பான பரிவுடன், குடும்பத்தினர் உண்பதற்கு முன், அதிதிகளை திருப்தி செய்ய வேண்டிய நியமத்தில் ஒரு விதிவிலக்கையும் குறிப் பிடுகிறார்[41]:

सुवासिनीः कुमारीश्च रोगिणो गर्भिणीः स्त्रियः ।
अतिथिभ्योऽन्वगेवैतान्भोजयेदविचारयन् ॥

தன் பிறந்த வீட்டிற்கு வருகை தந்திருக்கும் சுவாஸினிகள், குமாரிகள், வியாதியஸ்தர்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதலா னோருக்கு இல்லத்திற்கு வருகை தரும் அதிதிகளுக்கு உணவிடு வதற்கும் முன்னர் உணவளிப்பது முறையே. கிருகஸ்தர் இவ்விஷ யத்தில் எவ்வகையிலும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

### தம்பதி

இவ்வாறு மிகுந்த எச்சரிக்கையுடன் முறையாக விதிக்கப்பட்ட கோட்பாடுகளின்படி பித்ருக்கள், தேவர்கள், பூதங்கள், அதிதிகள், பிருத்யர்கள், அப்யாகதர்கள் முதலானோருக்குப் போஜனம் அளித்த பிறகே, கிருகஸ்த தம்பதியினர் தாம் போஜனம் செய்யும் உரிமை பெறுகிறார்கள். போஜனத்தைப் பற்றிய இந்த நியமங்ளைப் பின் பற்றாத கிருகஸ்தன், ராஜா சுவேதரை விட இழிவான கதியையே

[41] மனுஸ்ம்ருதி 3.114, ப. 124

அடைவான். ராஜா சுவேதர் தரும நெறியிலான ஜீவனத்தை நடத்திய தாலும், தரும நெறியையே பின்பற்றி ராஜ்ய பரிபாலனம் செய்ததா லும் ஓரளவிற்குப் புண்ணியம் ஈட்டியிருந்தார். இதனால் சுவர்க்கத் திலும் அவரைப் பின் தொடர்ந்த பெரும் பசியின் கொடுமையிலிருந்து ஒரு சிறிதேனும் நிவாரணமாக அவருடைய பூத உடல் நல்ல நிலையிலேயே திகழ்ந்தது. ஆனால் தான் உண்பதற்கு முன் மற்றவர் களின் பசியை ஆற்ற வேண்டிய நியமத்தை மீறிய கிருகஸ்தனுக்கு ராஜா சுவேதருக்குக் கிடைத்த ஆறுதல் கூட கிடைப்பது அரிது. இந்த கிருகஸ்தனைப் பின் தொடரக் கூடிய வினைப்பயனை எச்சரிக்கும் வாயிலாக மனு இவ்வாறு கூறுகிறார்[42]:

अदत्त्वा तु य एतेभ्यः पूर्वं भुङ्क्तेऽविचक्षणः ।
स भुञ्जानो न जानाति श्वगृध्रैर्जग्धिमात्मनः ॥

பித்ருக்கள், தேவர்கள், பூதங்கள், அதிதிகள், பிருத்யர்கள் மற்றும் அப்யாகதர்கள் இவர்களை முதலில் திருப்தி செய்யாமல் தான் உணவு உண்ணும் மூடனான கிருகஸ்தன் குருடனேயாம். ஏனெ னில் தான் இவ்வாறு உண்ணும் போது, பின்னால் தன் சரீரம் நாய்களுக்கும் பருந்துகளுக்கும் உணவாகும் என்பது அவனுக்குப் புலப்படுவதில்லை.

தருமத்தைக் கடைப்பிடிக்கும் கிருகஸ்தன் மற்றெல்லோரும் உணவு உண்பதற்கு முன்பு தான் உண்ணுவதில்லை. அனைவரும் உண்ட பின்னர், தன்னை வந்தடைந்த அனைத்து ஜீவன்களையும் நன்கு போஷித்த பிறகே, கிருகஸ்த தம்பதியினரின் தகுந்த போஜன காலம் அமைகிறது. மற்றவர்களைத் திருப்தி செய்த பிறகு எஞ்சிய அன்னத்தை, பஞ்சமகாயக்ஞத்தின் அவசிஷ்ட அன்னத்தை உண்பதே கிருகஸ்த தருமத்தின் சாரம்[43]:

भुक्तवत्स्वथ विप्रेषु स्वेषु भृत्येषु चैव हि ।
भुञ्जीयातां ततः पश्चादवशिष्टं तु दम्पती ॥

விப்ர அதிதிகளிலிருந்து தொடங்கி, பிருத்யர், குடும்பத்தினர் மற்றும் கிருகத்திலுள்ள ஏனைய பந்துக்கள் உள்பட அனைவருக் கும் போஜனம் அளித்த பின்னர் எஞ்சியிருக்கும் யக்ஞசிஷ்ட அன்னத்தை உண்பதே கிருகஸ்த தம்பதியினருக்கு முறையாம்.

---

[42] மனுஸ்ம்ருதி 3.115, ப. 124
[43] மனுஸ்ம்ருதி 3.116, ப. 125

மேதாதிதி, மனுஸ்ம்ருதியில் முன்னர் உள்ள ஒரு சுலோகத்தை விளக்குகையில் மேற்கூறிய சுலோகத்திலுள்ள 'அவிசிஷ்டம் து தம்பதீ' என்ற கூற்றை இவ்வாறு தெளிவுபடுத்துகிறார்: 'கிருகஸ்தனுக்கும் அவன் பத்தினிக்கும் விதிக்கப்பட்ட போஜன காலம் ஒன்றே. கிருகஸ்த தம்பதியினருக்குத் தனித் தனியான போஜன காலம் என்பது கிடையாது'[44]:

यो भर्तुर्भोजनकालः स एव भार्याया अपि पृथक्तस्या भोजनकालस्याभावात् ।

## திரௌபதி ஸத்யபாமை உரையாடல்

கணவன் மனைவியருக்கு ஒரே போஜன காலம் என்ற விதியை விளக்கும் மேதாதிதி, மஹாபாரதத்தில் வன பர்வத்தில் திரௌபதிக்கும் ஸத்யபாமைக்கும் இடையே நடந்த உரையாடலையும் நினைவு கூர்கிறார். இந்த சம்பாஷணையின் போது, திரௌபதி தன் ஐந்து பதிகள் உள்பட அனைவருக்கும் உணவு படைத்துவிட்டுப் பிறகே தான் உண்ணுவதாகக் கூறுகிறாள்[45]:

नाभुक्तवति नास्नाते नासंविष्टे च भर्तरि ।
न संविशामि नाश्नामि सदा कर्मकरेष्वपि ॥

என் கணவன்மார்களும் அனைத்துப் பணியாளர்களும் உண்ணும் வரை நானும் உணவு உண்பதில்லை. அவர்கள் குளிப்பதற்கு முன்னர் நான் குளிப்பதுமில்லை. அவர்கள் உறங்கும் வரையில் நான் உறங்குவதுமில்லை.

திரௌபதி இந்த உரையாடலில், இந்திரபிரஸ்தத்தின் தன்னுடைய அன்றாட வாழ்க்கை தொடர்பான பல சங்கதிகளைக் கூறுகிறாள். திரௌபதி ஸத்யபாமையரின் இவ்வுரையாடல் திரௌபதியின் அசாதாரணத் தன்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. திரௌபதி, பாண்டவர்களுடைய கிருகத்தின் அனைத்து நடவடிக்கைகளின் பொறுப்புகளையும் தானே சுமைதாங்கியாய் ஏற்றுக் கொண்டிருந்தாள் என்பதே அவர்களது உரையாடலின் சாரம். அவள் ஸத்யபாமையிடம் தான் தனியாகவே இல்லறத்தின் பொறுப்புகள் அனைத்தையும் நிர்வகித்ததாகவும், இதனால் யுதிஷ்டிரரும்

---

[44] மனுஸ்ம்ருதி 3.113, மேதாதிதி உரை ப. 123
[45] மஹாபாரதம் வன 233.24, ப. 1620

அவரது நான்கு சகோதரர்களும் தத்தம் விருப்பப்படி செயலாற்றும் வாய்ப்பு பெற்றிருந்ததாகவும், தானே பாண்டவர்களின் வரவு செலவுகளைக் கவனித்து வந்ததாகவும், கிருகத்துடன் தொடர்பு கொண்ட அனைத்துப் பணியாளர்களின் பணிகளையும் மேற்பார்வை யிட்டு, அவர்களுக்கு வேண்டிய இன்றியமையாத் தேவைகளைக் கவனித்துப் பராமரித்து வந்ததாகவும், தானே பாண்டவ கிருகஸ்தர் களுக்காகப் பஞ்சமகாயக்ஞத்தை ஆற்றி வந்ததாகவும் கூறுகிறாள். இது மட்டுமல்ல, இவையனைத்தையும் செய்யும்போது தன்னுடைய எந்த ஒரு செயலும் பாண்டவர்களின் விருப்பங்களுக்கு மாறாக ஒரு போதும் அமையாதவாறு எச்சரிக்கையுடன் இருந்ததாகவும் தெரிவிக் கிறாள். தன்னுடைய அனைத்து கடமைகளையும் வருணிக்கும் திரௌபதி, ஸத்யபாமையிடம் இவ்வாறு கூறுகிறாள்[46]:

ये च धर्माः कुटुम्बेषु श्वश्र्वा मे कथिताः पुरा ।
भिक्षाबलिश्राद्धमिति स्थालीपाकाश्च पर्वसु ।
मान्यानां मानसत्कारा ये चान्ये विदिता मम ।
तान् सर्वाननुवर्तेऽहं दिवारात्रमतन्द्रिता ।
विनयान् नियमांश्चैव सदा सर्वात्मना श्रिता ।।

நான் தினமும் பிக்ஷை, பலி மற்றும் ஸ்ரார்த்தங்களை நிறை வேற்றுகிறேன். தவிரவும், நானே குறிப்பிட்ட திதி முகூர்த் தங்களில் செய்யவேண்டிய ஸ்தாலிபாக யக்ஞங்ளையும் மேற்கொண்டு நடத்துகிறேன். நானே மேன்மை பொருந்திய சான்றோர்களுக்கு ஆதரவும் உபசாரமும் அளிக்கிறேன். என் குடும்பத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கருமங்களையும், என் மாமியார் எனக்குக் கற்றுக் கொடுத்த இந்தத் தருமங்களையும், இன்னும் நானே அறிந்திருந்த மற்ற தருமங்களையும் நான் சலிப் பின்றி இரவும் பகலும் பேணி வருகிறேன். நான் எப்பொழுதும் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளும் நியமங்களில் நிலை பெற்றுள்ளேன். எக்காலத்தும் உடலிற்கும் உள்ளத்திற்கும் தூய்மையையும், தன்னடக்கத்தையும் பெறத் தேவையான நியமங்களைக் கடைப்பிடித்து வருகிறேன்.

[46] மஹாபாரதம் வன 233.33-35, ப. 1621

மேலும் திரௌபதி இவ்வாறு கூறுகிறாள்[47]:

अहं पतीन् नातिशये नात्यश्ने नातिभूषये ।
नापि श्वश्रूं परिवदे सर्वदा परियन्त्रिता ॥

கணவன்மார்கள் உறங்குவதற்கு முன் நான் ஒருபொழுதும் உறங்குவதில்லை. அவர்கள் போஜனம் செய்யும் வரையில் நானும் போஜனம் செய்வதில்லை. அவர்களின் விருப்பத்திற்கு விரோதமாய் நான் ஒருபோதும் என்னை அலங்கரித்துக் கொள்வதில்லை. நான் எந்த சமயத்திலும் என் மாமியாரைப் பற்றிக் குறை சொல்வதில்லை. எப்பொழுதும் சுயக்கட்டுப்பாட்டிலேயே நிலைபெற்றுள்ளேன்.

யுதிஷ்டிரர் இந்திரபிரஸ்தத்தை ஆண்ட பொழுது, அச்சமயத்தில் தன்னுடைய கிருகஸ்த வாழ்வை வருணிக்கும் திரௌபதி மேலும் இவ்வாறு கூறுகிறாள்[48]:

शतं दासीसहस्राणि कुन्तीपुत्रस्य धीमतः ।
पात्रीहस्ता दिवारात्रमतिथीन् भोजयन्त्युत ।
शतमश्वसहस्राणि दशनागायुतानि च ।
युधिष्ठिरस्यानुयात्रमिन्द्रप्रस्थनिवासिनः ।
एतदासीत् तदा राज्ञो यन्महीं पर्यपालयत् ।
येषां संख्याविधिं चैव प्रदिशामि शृणोमि च ।
अन्तःपुराणां सर्वेषां भृत्यानां चैव सर्वशः ।
आगोपालविपालेभ्यः सर्वं वेद कृताकृतम् ।
सर्वं राज्ञः समुदयमायं च व्ययमेव च ।
एकाहं वेद्मि कल्याणि पाण्डवानां यशस्विनि ।
मयि सर्वं समासज्य कुटुम्बं भरतर्षभाः ।
उपासनरताः सर्वे घटयन्ति वरानने ॥

குந்தியின் அறிவு மிகுந்த புத்திரர் யுதிஷ்டிரரின் அரண்மனையில் பணிவிடை புரியும் நூறாயிரம் தாசிப் பெண்கள் தம் கைகளில்

[47] மஹாபாரதம் வன 233.38, ப. 1621
[48] மஹாபாரதம் வன 233.49-54, ப. 1622

*உணவுப் பாத்திரங்களுடன் இரவிலும் பகலிலும் அதிதிகளுக்கு உணவளிப்பதில் ஈடுபட்டிருந்தனர். இந்திரபிரஸ்தத்தை ஆண்ட ராஜா யுதிஷ்டிரர் யாத்திரை மேற்கொண்ட பொழுது அவருடன் நூறாயிரம் யானைகளும் நூறாயிரம் குதிரைகளும் பின் தொடர்ந்து சென்றன. அவர் இந்திரபிரஸ்தத்தில் இருந்து ஆட்சி செய்த நாட்களில் அவருடைய வைபவம் இத்தகையதாய் விளங்கியது. அப்போது நானே அவருடைய எண்ணற்ற தாசி மகளிரையும், குதிரைகளையும், யானைகளையும் பராமரித்து வந்தேன். நானே அவர்களின் அவசியமான தேவைகளை விசாரித்து அவற்றைப் பூர்த்தி செய்து வந்தேன்.*

*அந்தப்புரவாசிகள், இல்லத்தின் பிருத்யர்கள் மற்றும் மாட்டிடையர்கள், ஆட்டிடையர்கள் உள்பட அனைத்துப் பணியாளர்கள், இவர்கள் அனைவரும் செய்தவற்றையும், செய்யாதவற்றையும் நானே அறிந்து உணர்ந்திருந்தேன். புகழ் பெற்ற ஸத்யபாமையே! ராஜா யுதிஷ்டிரர் மற்றும் அவருடைய சகோதரர்களுடைய அனைத்து வரவு செலவுகளை முற்றிலும் அறிந்தவள் நான் ஒருத்தியே. பரத வம்சத்தின் காளைகளான பாண்டவர்கள் கிருகத்தின் முழுப்பொறுப்பையும் என் ஒருத்தியிடமே ஒப்படைத்து விட்டு, சுமை நீங்கியவராய் உபாசனைகளிலும், அதற்கேற்ற கருமங்களிலுமே ஈடுபட்டனர்.*

திரௌபதி தன்னுடைய பொறுப்புகள் மற்றும் செய்கைகளைப் பற்றி வருணிப்பதிலிருந்து அவள் பாண்டவ குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை நிர்வகித்து வந்தாள் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. எனவே, அவள் மற்றவர்கள் உணவு உண்ட பின், அனைவருக்கும் உணவு படைத்த பின்னர், தான் உணவு உண்ணும் வழக்கத்தைக் கடைப்பிடித்தது இயல்பானதே. யாருக்கு மற்றவர்களைப் பராமரித்து ஆதரவளிக்கும் கடமை உள்ளதோ அவர் தன்னைச் சார்ந்துள்ள அனைவருக்கும் பின்னரே உணவு உண்ண வேண்டும் என்பதே உணவு பற்றிய பாரதீய நியமங்களின் சாரம். பொதுவாகக் கிருகஸ்தருக்குரிய இயல்பான கடமையைக் கிருகஸ்த தம்பதியினர் இருவருமே சேர்ந்து ஏற்றுக் கொள்கின்றனர். எனவே தான், மேதாதிதி கூறியவாறு, அவர்கள் இருவருக்கும் போஜன காலம் ஒன்றே. அவர்கள் இருவரும் பஞ்ச மகாயக்ஞத்தை விதிமுறைப்படி நிறைவேற்றிய பிறகு, இவ்வாறு

அனைவரின் பங்கினையும் அளித்து அனைவரையும் திருப்தி செய்த பிறகே 'கிருதகர்மாக்களாய்' அதாவது, கடமையை ஆற்றியவராய் போஜனத்திற்கு அமருகின்றனர்.

## விகஸாசீ பவேந்நித்யம்: விகஸத்தையே உண்பாயாக

மனு, கிருகஸ்தனின் போஜனத்தைப் பற்றிய இந்த வரிசைக் கிரம மான, விரிவான விதிமுறையை உபதேசித்து இறுதியில் மீண்டும் ஒரு முறை தருமநிஷ்டனான கிருகஸ்தன் மற்றவர்களை நிறைவடையச் செய்த பிறகு எஞ்சிய சேஷமான அன்னத்தையே உண்ண வேண்டும் என்கிற நியமத்தை வலியுறுத்துகிறார். கிருகஸ்தனின் இல்லத்தில் ஒரு பொழுதும் தனக்காக மட்டும் அன்னமாக்குதல் என்பது இல்லை. அங்கு, கிருகஸ்தனைச் சுற்றிலுமுள்ள அனைத்துச் சராசரங்களுக்கும், மற்றும் அவன் ஆசிரயத்தை நாடி வந்த சிருஷ்டியின் அனைத்துப் பிரிவுகளுக்கும், அனைத்து ஜீவன்களுக்கும், மற்றும் அனைத்து மானிடர்களுக்காகவும் அன்னம் ஆக்கப்படுகிறது. மேலும் கிருகஸ்த தம்பதியினர் இவர்கள் அனைவரின் பங்கையும் பிரித்தளித்து எல்லோரையும் திருப்தி செய்த பிறகே தாம் போஜனம் செய்கின்றனர். இவ்வாறு பஞ்சமகாயக்ஞத்தின் சேஷமாய் மீதமான அன்னத்தை உண்பதே கிருகஸ்த தம்பதியினருக்கு அறவழியிலான போஜனம். மற்றவர்களை நிறைவடையச் செய்யாமல் தான் போஜனம் செய்யும் கிருகஸ்தன் பாவத்தை மட்டுமே உண்கிறான். மனு கூறுவதாவது [49]:

देवानृषीन्मनुष्यांश्च पितॄन्गृह्याश्च देवताः।
पूजयित्वा ततः पश्चाद्गृहस्थः शेषभुग्भवेत्।
अघं स केवलं भुङ्क्ते यः पचत्यात्मकारणात्।
यज्ञशिष्टाशनं ह्येतत्सतामन्नं विधीयते॥

தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள், பூதங்கள் மற்றும் மனிதர்களுக்கு விதிமுறைப்படி அன்ன சமர்ப்பணம் செய்த பிறகு, எஞ்சிய அன்னத்தை மட்டும் உண்பதே கிருகஸ்தனுக்குத் தகுந்த செயல். எந்தக் கிருகஸ்தன் தனக்கென மட்டுமே போஜனம் செய்து

[49] மனுஸ்ம்ருதி 3.117-118, ப. 126-27

கொள்கிறானோ அவன் உண்பது உணவை அல்ல, பாவத்தையே. ஏனெனில் நல்லோருக்குப் பஞ்சமகாயக்ஞத்தை நிறைவேற்றிய பின் எஞ்சியுள்ள அன்னமே உட்கொள்ளத் தகுந்த உணவென விதிக்கப்பட்டுள்ளது.

மனுஸ்ம்ருதியில் பஞ்சமகாயக்ஞத்தின் வருணனை இத்துடன் முடிவுறவில்லை. பஞ்சமகாயக்ஞத்தின் வெவ்வேறு பிரிவுகளை நுணுக்கத்துடன் விளக்கும் மனு, வெவ்வேறு சந்தர்ப்பங்களில், அனைத்து விவகாரங்களையும் பற்றிய விரிவான உபதேசங்களை மேலும் ஒரு இருநூறு சுலோகங்களில் வழங்குகிறார். இத்துணை நீண்ட விதிமுறைகளின் விவரணத்திற்குப் பிறகே, மனு, தரும நெறியில் ஒழுகும் கிருகஸ்தனுக்குத் தம்முடைய ஆசிகளை இவ்வாறு வழங்குகிறார்[50]:

विघसाशी भवेन्नित्यं नित्यं वाऽमृतभोजनः ।
विघसो भुक्तशेषं तु यज्ञशेषं तथामृतम् ॥

நீ நாளும் விகஸத்தையும் அம்ருதத்தையும் உண்பாயாக. மற்றவர்கள் உண்ட பிறகு மிஞ்சிய அன்னமே விகஸம் என்று கூறப்படுகிறது. யக்ஞத்தை ஆற்றிய பின் எஞ்சிய அன்னம் நிச்சயம் அம்ருதமேயாம்.

[50] மனுஸ்ம்ருதி 3.285, ப. 280